# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 308 | சனி, அக்டோபர் 12, 2024 | 14 பக்கங்கள்




## சுமந்திரனால் காலியாகும் வீடு

அகிலன்



## யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழருக்கு எதிரான நில அபகரிப்பு தொடரும்

ஹஸ்பர் ஏ ஹலீம்

## தமிழர்களுடன் இந்தியா ஒரு போதும் இணக்கத்தை ஏற்படுத்தாது:

ஊடகச் செம்மல் பவா சமத்துவன்

முதல் பெண் மாவீரர்
2ஆம் லெப். மாலதி
அவர்களின் 37வது நினைவாண்டின்
நினைவாக...






© 2024 இலக்கு இணையம்

# 2024 பொதுத் தேர்தலில்
## 22 மாவட்டங்களில் 690 குழுக்கள் போட்டி – தேர்தல்கள் ஆணைக்குழு




2024 பொதுத் தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களில் 690 குழுக்கள் போட்டியிடப் போவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

74 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.


அநீதிகள் இடம்பெற்றுள்ளதாக உணர்ந்தால் அந்த குழுக்கள் நீதிமன்றத்திற்கு செல்ல முடியும் எனவும் ரத்நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான அரசியல் குழுக்கள் போட்டியிடுவதுடன், அதன் எண்ணிக்கை 64 ஆகும்.

மொனராகலை மற்றும் பொலன்னறுவை தேர்தல் மாவட்டங்களில் குறைந்த எண்ணிக்கையிலான அணிகள் போட்டியிடுவது

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## பொதுத் தேர்தல்: ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 11 ஆசனங்களை பெறும்:
### செல்வம் அடைக்கலநாதன்



பொதுத் தேர்தலில் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 11 ஆசனங்களை பெறும் என கூட்டணியின் வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வன்னி தேர்தல் மாவட்டத்திற்கான வேட்பு மனுவை தாக்கல் செய்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வன்னியில் எமது அணி சார்பில் போட்டியிடும் அத்தனை பேரும் விடுதலைக்காக போராடியவர்கள். அந்த விடுதலையை அகிம்சை வழியில் பெறுவதற்காக நாங்கள் இன்று தேர்தலில் போட்டியிடுகின்றோம் என்றார்

# காலநிலை மாற்றத்தால் வீரியம் பெறும் புயல் காற்று



கடந்த மாதம் அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதியில் ஏற்பட்ட ஹெலன் என்ற சுழல் புயல்காற்று காலநிலை மாற்றம் காரணமாகவே வீரியம் பெற்றிருந்ததாக World Weather Attribution என்ற ஆய்வு நிறுவனம் கடந்த புதன்கிழமை(9) தெரிவித்துள்ளது.

இந்த புயல்காற்றில் சிக்கி 230 இற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன், பெருமளவானபொருட் சேதங்களும் ஏற்பட்டிருந்தன. காலநிலை மாற்றம் கடல் நீரின் வெப்பநிலையை அதிகரித்ததுடன், காற்றின் வேகத்தையும், மழை வீழ்ச்சியின் அளவையும் அதிகரித்திருந்தது. அது புயல் காற்றின் வேகத்தை 500 மடங்காக அதிகரித்திருந்தது.

காலநிலை மாற்றம் காற்றின் வேகத்தை மணிக்கு 21 கி.மீ ஆகவும், மழை வீழ்ச்சியை 10 விகிதத்தினாலும் அதிகரித்திருந்தது. பூமி தொடர்ந்து வெப்பமடைவதால் இந்த மாற்றங்களை நாம் தொடர்ந்து அவதானிக்க முடியும் என பிரித்தானியாவின் இம்பீரியல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பென் கிளார்க் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 26 ஆம் நாள் ஏற்பட்ட இந்த புயல்காற்று மணிக்கு 225 கி.மீ வேகத்தில் வீசியதுடன், 40 றில்லியன் கலன் அளவுள்ள நீரையும் மழையாக பொழிந்திருந்தது. இறந்தவர்களில் பலர்நீரில்மூழ்கியேஇறந்துள்ளனர்.

அதிகளவான எரிபொருள் பாவனையே இந்த காலநிலை மாற்றத்திற்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே கடந்த வியாழக்கிழமை(10) மில்டன் எனப்படும் புயல்க்காற்றுஅமெரிக்காவின்புளோரிடா மாநிலத்தை தாக்கியதால் 3 மில்லியன் மக்கள் மின்சார

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஒரு வருடப்போர்–காசாவில் 17,000 சிறுவர்கள் பலி




கடந்த ஒரு வருடமாக காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இதுவரையில் 16756 சிறுவர்கள் கொல்லப்பட்டதுடன், அங்கு 41990 பேர் கொல்லப்பட்டும் ஏறத்தாள ஒரு இலட்சம் மக்கள் காயமடைந்தும் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட சிறுவர்களில் பலர் காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தொடர் பொருளாதார தடைகளினால் பாதிப்புக்களைச் சந்தித்தவாறு வாழ்ந்து வந்தவர்கள். அந்த பிராந்தியம் சிறுவர்களின் புதைகுழியாக மாறி வருகின்றது. 17,000 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் தமது பெற்றோர்களில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்து வாழ்கின்றனர் என ஐ.நா மேலும் தெரிவித்துள்ளது.

பல ஆயிரம் மக்களின் உடல்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பதால் இறப்பு விகிதம் மேலும் அதிகரிக்கலாம் என காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அங்கு சராசரியாக தினமும் 115 பேர் கொல்லப்படுவதுடன், 266 பேர் காயமடைகின்றனர் அவர்களில் 46 பேர் சிறுவர்கள், 31 பேர் பெண்கள். 902 குடும்பங்கள் முற்றாக அழிந்துள்ளன என அது மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, காசா முற்றாக தரைமட்டமாவதற்கு முன்னர் உலகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட Medical Aid for Palestinians என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. அங்கு எஞ்சியுள்ள வைத்தியசாலையையும் அழித்து ஒரு முழுமையான அழிவை ஏற்படுத்த இஸ்ரேல் முயன்று வருவதாக அது குற்றம் சுமத்தியுள்ளது.

# லெபனான் – இஸ்ரேல் மோதல் பெரும் போராக மாறும் ஆபத்து – ஐ.நா



தற்போது லெபனான் மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் மிகப்பெரும் போராக அந்த பிராந்தியத்தில் மாறும் சாத்தியங்கள் உள்ளன. எனினும் அதனை தடுப்பதற்கான கால அவகாசம் எம்மிடம் தற்போதும் உள்ளது என கடந்த செவ்வாய்க்கிழமை(08) நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் உரையாற்றும்போது ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்ரொனியோ குற்றெரஸ் தெரிவித்துள்ளார்.

நான் கடந்த பல மாதங்களாகவே எச்சரித்து வருகின்றேன். மேற்கு கரையில் ஏற்பட்டுள்ள நிலை அங்கு ஒரு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. லெபனானில் ஏற்பட்டுள்ள மோதல்கள் மிகப்பெரும் பிராந்திய போராக மாறும் ஏது நிலைகளை ஏற்படுத்தியுள்ளது. அது முழுப் பிராந்தியத்தையும் ஆபத்தில் தள்ளியுள்ளது.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# செயற்கைச் சூரியனை உருவாக்கும் 30 நாடுகள்

தடையில்லா மின்னாரத்தை உலகிற்கு வழங்கவென செயற்கையான சூரியனை அணுசக்தி மூலம் உருவாக்கும் முயற்சியில் 30 நாடுகள் இணைந்து பிரான்ஸின் தென் பகுதியில் பணியாற்றி வருகின்றன.

The International Thermonuclear Experimental Reactor (ITER) என்ற இந்த திட்டத்தில் அமெரிக்கா, ரஸ்யா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, யப்பான் தென்கொரியா ஆகிய நாடுகள் இணைந்து பணியாற்றி வருகின்றன.

அணுக்களை ஒருங்கிணைப்பதன் மூலம் அதிக சக்தியை உருவாக்க முடியும், இது தற்போதுள்ள அணுசக்தி மின்னார உற்பத்தியை விட பல மடங்கு சக்தி வாய்ந்தது. ஆனால் இந்த பொறிமுறை சூரியனிலும், நச்சத்திரங்களிலும் தான் நிகழந்து வருகின்றது. பூமியில்



அதனை உருவாக்குவதற்கு மிக உயர் வெப்பநிலை மற்றும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இலங்கையின் புதிய அரசாங்கத்தின் தீர்மானம் ஏமாற்றமளிக்கின்றது

### சர்வதேச மன்னிப்புச்சபை




இலங்கையின் புதிய அரசாங்கம் கடந்த கால கொள்கைகளை தொடர்வதற்கும் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை எதிர்ப்பதற்கும் தீர்மானித்தமை ஏமாற்றமளிக்கின்றது என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி பிராந்திய இயக்குநர் பாபு ராம் பண்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான வரைவு தீர்மானம் வாக்கெடுப்பின்றி ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 57வது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எந்தவொரு இறையாண்மையுள்ள அரசாலும் அதன் அரசமைப்பிற்கு முரணான மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயல்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் வெளிப்புற பொறிமுறையை கட்டாயமாக திணிக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாங்கள் ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையிலிருந்து எங்களை விலக்கிக்கொள்கின்றோம்.

தொடர்புபட்ட நாடு என்ற அடிப்படையில் இலங்கையின் சம்மதம் இன்றியே 51/1 தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது.வாக்கெடுப்பின் போது உலக நாடுகள் அந்த தீர்மானம் குறித்து பிளவுபட்டிருப்பது வெளிப்பட்டது. இதன் காரணமாக அந்த 51/1 தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆணையை மேலும் நீடிக்கும் தீர்மானம் மனித உரிமை பேரவையின் பொது உடன்பாடு அற்றது' எனக் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இலங்கையின் இந்த கருத்து தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி பிராந்திய இயக்குநர் பாபு ராம் பண்ட் தெரிவிக்கையில், 'ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளமை இலங்கையில் காணப்படும் மனித உரிமைகள் கரிசனை குறித்து சர்வதேச சமூகம் தொடர்ந்தும் கவனம் செலுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

புதிய தீர்மானத்தின் மூலம் ஆணை நீடிக்கப்பட்டமை பொறுப்புக்கூறலிற்கு ஆதரவளிப்பதை நோக்கிய வரவேற்கத்தக்க விடயம், எனினும் இந்த தீர்மானம் மேலும் ஒரு வருடகாலத்திற்கு மாத்திரம் நீடிக்கப்பட்டுள்ளமை ஏமாற்றமளிக்கின்றது.

சிவில் சமூகத்தினரும் சர்வதேச அமைப்புகளும் ஆணையை இரண்டு வருடங்களிற்கு நீடிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

சமீபத்தில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்ற அடுத்த மாதம் பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள நாடு என்ற வகையில் இஅரசியல் மாற்றத்தை எதிர்கொண்டுள்ளநாடு என்றவகையில்இலங்கைகடந்த காலங்களில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் சிறந்த ஈடுபாட்டை பேணுவது அவசியம்.

இதன் காரணமாக இலங்கையின் புதிய அரசாங்கம் கடந்த கால கொள்கைகளை தொடர்வதற்கும் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## நடந்ததும் நடப்பனவும் தெரியும் உங்கள் மதிப்பீட்டில் இறைமையை மீளுறுதி செய்பவர்க்கு வாக்களியுங்கள்

உலகில் 21ம் நூற்றாண்டு பிறக்கையில் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் உலகின் மூத்த குடிகளான ஈழத்தமிழர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? தங்களின தேசியத் தலைமையில் தங்களுக்கான சீருடை அணிந்த முப்படைகள், நிர்வாகக்கட்டமைப்புக்கள், சட்டவாக்க சட்ட அமுலாக்க முறைமைகள் கொண்ட நடைமுறையரசில் சிறிலங்காவால் விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளும் வென்று தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கிச் சிறிலங்காவின் முப்படைகளும் மேற்கொண்ட இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு அரசியல் நடவடிக்கைளுக்கு நடுவிலும் உறுதியுடன் தங்கள் உயிரையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் 22வது ஆண்டில் உலகம் போற்றக் கூடிய முறையில் வாழ்ந்து கொண்டிருந்தனர். இது ஈழத்தமிழர்கள் குறித்த மிலேனியத் தொடக்க உலக வரலாறு.

அப்பொழுது ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை என்பது அவர்களின் இறைமையின் மீளுறுதிப்படுத்தலை அவர்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அனைத்துலக நாடுகளும் அமைப்புக்களும் ஏற்று ஈழத்தமிழர்களின் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கும் வளர்ச்சிகளுக்கும் அனைத்துலகச் சட்டங்களின் அடிப்படையில் தங்களின் நடைமுறையரசை உலக அரசாக ஏற்க வேண்டும் என்பதாக இருந்தது. இதனை 2009ம் ஆண்டின் முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு மூலம் சிறிலங்கா 176000 ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனஅழிப்புச் செய்து பின்னடையச் செய்தது. இதுவும் ஈழத்தமிழரின் உலக வரலாறு.

ஆனால் இன்று இறைமைக்கு முன்னுரிமை கொடுக்காது மக்களுக்கு மதிப்பு அளிக்காது வரலாற்றை மீளுற்பத்தி செய்யாது ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் 15 ஆண்டுகள் ஆட்சியாளர்களுக்கும் வல்லாண்மைகளுக்கும் முகவர்களாக அரசியல் செய்ததின் விளைவு இன்று ஆயிரக்கணக்கான வேட்பாளர்களாக பல நூறு அரசியல் கட்சிகளாக சில நூறு தனியார் கட்சிகளாக சந்தையில் நிற்பது போல எந்த அதிகாரமும் இல்லாத சிறிலங்காப் பாராளுமன்றத் தேர்தலில் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் பிரிந்து நின்று சிங்களக் கட்சிகள் அதிக வாக்குகள் பெறும் நிலையை உருவாக்கியுள்ளமையை தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்திய காட்சிகள் உறுதியாக்கியுள்ளன. அப்படியானால் ஈழத்தமிழருக்கு நடந்தது தெரியும். நடப்பனவும் தெரியும். நடக்கவேண்டியது ஈழத்தமிழரின் இறைமையை மீளுறுதி செய்வதே என்பதும் தெரியும். இந்தத் தன்மையுடன் எந்தக் கட்சியோ தனியாளோ உங்கள் முன் தேர்தலில் போட்டியிட்டால் உங்கள் வாக்கினை இறைமையை மீளுறுதி செயயக் கூடிய அவருக்குச் செலுத்தி நீங்களும் இறைமையை மீளுறுதி செய்து சனநாயக வழியில் முன்னெடுக்கப்படும் ஈழத்தமிழர் தேசியப் போராட்டத்திற்கான பங்களிப்பைச் செலுத்துங்கள் என்பதே இலக்கின் இவ்வாரக் கருத்து. அதுவே தேசியத் தலைமை உங்களிடம் விட்டுச் சென்ற பொறுப்பை நிறைவேற்றிய மகிழ்ச்சியை உங்களுக்குத் தரும்.

அதனை விடுத்து ஒரு தேசமாக 2009 இல் உலகு கண்ட தாயகத்தில் ஒரு கதிரைக்காக இன்று ஆயிரக்கணக்காண குழுக்களாக, அலங்கோலமாக ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் நிற்பதைப் பார்க்க சத்தி வருகிறது. அதுவும் மரத்துக்கு மரம் தாவும் குரங்குகள் போல கட்சிக்குக் கட்சி தாவும் குரங்குகளாக பெண் அரசியல்வாதிகள் கூட வீட்டில் இருந்து சங்குக்குக் தாவுவதும் சைக்கிளிலிருந்து வீட்டுக்குத் தாவுவதும் ஒரு புறம். வீட்டுக்குள் இருக்கும் பூனை தனக்குப் பிடித்ததைக் களவு எடுத்துக் கொண்டு ஓட்டமாக ஒடுவது போல மக்களுக்கு அறிமுகமான தேர்தல் சின்னங்களை வீடு முதல் சங்கு வரை அந்த அந்த அமைப்பில் இருந்து கொண்டே களவு எடுத்துக்கொண்டு ஓடோடென்று ஒடுவதும் அதற்குப் பெயர் கட்சியைக் காத்தல் என்று கதையளப்பதும், பொதுத்தேசியக் கட்டமைப்பொன்றை சிவில் சமுகத்தினர் படாதபாடுபட்டுக் கட்டியெழுப்பிய நிலையில் அதற்குள் முகாமைத்துவ 14 இல் ஒன்று என்று சொன்ன ஊடகவியலாளரே வீட்டுக்குப் பாய்வதும், உண்மையில் கடந்த வார ஈழத்தமிழ் அரசியல்வாதிகளின் செயல்களை வீடியோ பண்ணினால் நகைச்சுவைத் திரைப்படத்துக்கான ஆஸ்கார் விருது உங்களுக்குதான் என்று அடித்துச் சொல்லலாம்.

காற்றாகவும் ஒளியாகவும் நீராகவும் நிலமாகவும் வானமாகவும் தங்கள் வாழ்வையே தேசவிடுதலைக்காக மக்களின் சுதந்திர வாழ்வுக்காக மாற்றியமைத்த மாவீரர்களின் தேசத்தில் நின்றுதான் 225 உறுப்பினர்கள் கொண்ட சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்றத்தில் மூலையில் குந்தியிருந்து கிண்டல்களும் கேலிகளும் உதாசீனங்களும் கண்டு எதையுமே செய்ய இயலாது எழுந்து வரும் உறுப்பினர்களாகப் போய் அமர இத்தனை பதவியாசையை வெளிப்படுத்துகின்றீர்கள். எத்தனை கேவலமான செயல்கள் செய்கின்றீர்கள். மாவீரர்களின் ஆன்மா உங்களை என்றுமே மன்னிக்கவே மன்னிக்காது. நின்ற சொல்லராக நிற்கும் மனிதப் பண்பே இல்லாத நீங்கள் தலைமையைப் பற்றிப் பேசிகின்றீர்களே நீங்களா ஈழத்தமிழர்களுக்குத் தலைமை தரப்போகின்றீர்கள்? இதுதான் இன்று ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலகநாடுகள் எங்கும் கேட்கும் கேள்வி.

ஒரு பெரும் தியாக வரலாற்றை வரைந்த ஈழத்தமிழர்களுக்கு 15 ஆண்டுகளில் இந்த நிலை என்றால்? அது எப்படி நிகழ்ந்துள்ளது. பதில் இப்படியொரு நிலை தோன்ற வைத்த அனைத்து அரசியல்வாதிகளும் தயவு செய்து நந்தி விலகி வழி விட வேண்டும் என்பது போல உங்கள் அலுவல்களைப் பார்த்துக் கொண்டு மக்களிடம் அரசியலை விடுங்கள். அவர்கள் செய்வார்கள். அவர்கள் தலைவனின் செல்லப் பிள்ளைகள். மாவீர்களின் தாய் தந்தையர் கணவன் மனைவி சகோதர சகோதரிகள். வலிசுமந்த நெஞ்சுகள். அவர்களுடையதுதான் நாடு. உங்களுடைய ஆங்கில அறிவையும் சிங்கள நட்பையும் வல்லாண்மைகளின் உறவையும் பணத்தையும் பட்டத்தையும் வைத்துக் கொண்டு மக்களை அரசியலை விட்டு ஓடத்துரத்தி விட்டு நீங்கள் வெளிப்படையாகவே சிங்களக் கட்சிகளுக்கு வாக்கு வேண்டிக் கொடுக்கும் முகவர்களாக நிற்கின்றீர்கள். இவ்விடத்தில் ஆர்வம் உள்ளவர்கள் போராட்டக்காலத்தில் தெருக்கூத்துக்கள் போட்டது போல மக்களுக்கு நடுவில் கலை மூலம் உள்ளவர்களில் நல்லவர்கள் என நீங்கள் உணர்ந்தால் அவர்களுக்கு வாக்களிக்க நிகழ்ச்சிகளைச் செய்யுங்கள். ஊடகங்களில் இறைமைக்கு உழைத்தவர்கள் மக்களின் நல்வாழ்வுக்கு உழைத்தவர்கள் விவரங்களை கட்சி என்பது தாண்டி வெளியிடுங்கள். அப்போதாவது மக்களுக்குப் பாராளுமன்றத்தில் குரல் கொடுக்கக் கூடிய சில பாராளுமன்ற உறுப்பினர்களாவது கிடைக்கும். இதில் வேடிக்கை என்னவென்றால் ஆயிரக்கணக்கான வேட்பாளராக ஒரு சிறிய வாக்காளர் தொகையைப் பிரிப்பதால் சிங்களக்கட்சிகளுக்கு தேசியப்பட்டியல் உறுப்புரிமையும் கூடக் கிடைக்கக் கூடிய அபாயம் உள்ளது. திகாமடுவ திருகோணமலை மட்டுமல்ல மட்டக்களப்பு வவுனியா யாழ்ப்பாணத்திலும் தமிழ் உறுப்பினர் தெரிவு சிக்கலுக்குள்ளாகலாம்.

1214 முதல் 1621 வரை 410 ஆண்டுகள் உலகு கண்ட யாழ்ப்பாண அரசின் இறைமையை 1978 முதல் 2009 வரை மீளவும் தமிழீழத் தேசமாக உலகு கண்ட இறைமையை உலகுக்கு வெளிப்படுத்தும் தேர்தல் மேடையாகவாவது ஊடகங்களும் மக்களும் இந்தச் சிறிலங்காப் பாராளுமன்றத் தேர்தல் மேடையைப் பயன்படுத்தினால் அதற்கு தூண்டல் தரும் யாராவது வேட்பாளர் இனங்காணப்பட்டால் அவருக்கு மக்கள் வாக்களிக்க உதவியாக அமையும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணம்.

**ஆசிரியர்**



# சுமந்திரனால் காலியாகும் வீடு

அகிலன்

“வீட்டிலிருந்து வெளியே வர எமக்கு விருப்பமில்லை. ஆனால், அங்கு இப்போது ஒரு தனிநபரின் ஆதிக்கம்தான் மேலோங்கியிருக்கின்றது. அந்த ஒருவரால் பலர் வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். இறுதியாக கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா கூட பதவியைத் துறந்துவிட்டார்.”

இது யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் கூற்று. தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறி, ஜனநாயக தமிழரசுக் கூட்டணி என்ற பெயரில் புதிய கட்சியை அமைத்து யாழ். மாவட்டத்தில் களமிறங்கியுள்ள இந்தக் கட்சிக்கு பிரபல சட்டத்தரணி கே.வி. தவராஜா தலைமைதாங்குகின்றார். யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை இக்கட்சியின் சார்பில் வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் சரவணபவன் தெரிவித்த கருத்துதான் இது. தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசசனும் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழரசுக் கட்சியின் வீட்டிலிருந்து முக்கிய பிரமுகர்கள் பலரும் வெளியே வந்திருப்பதைக் காணமுடிகின்றது. தமிழரசுக் கட்சிக்குள் இப்போது, சுமந்திரனுக்கு குடைச்சல் கொடுப்பவராக இருக் கும் ஒரேயொருவர் சிறீதரன் மட்டும்தான் பொதுத் தேர்தலின் முடிவுதான் தமிழரசுக் கட்சித் தலைமைக்கான போட்டியின் அடுத்த கட்டம் எவ்வாறிருக்கும் என்பதை வெளிப்படுத்தும்.

தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பொறுப்புக்களிலிருந்தும் விலகுவதாக அதன் தலைவர் மாவை சேனாதிராஜா அறிவித்திருப்பதும் சுமந்திரனின் செயற்பாடுகளால்தான்.

ஒரே அணியில் சுமந்திரனும், சிறீதரனும் களமிறங்கியிருப்பதும், தமிழரசிலிருந்து பிரிந்து சென்ற அதிருப்தியாளர் குழு தனியாகக் களமிறங்கியிருப்பதும் அரசியல் களத்தை இந்த வாரம் பரபரப்பாக்கிய செய்திகள். இதன் அடுத்த கட்டம் எவ்வாறானதாக அமையும் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி!

கடந்த சுமார் 10 வருடங்களாக மாவை சேனாதிராஜாதான் கட்சியின் தலைவராக இருக்கின்றார். பெயரளவுக்குத்தான் தலைவராக இருக்கின்றார் என்பது பகிரங்கமானதுதான். அனைத்து விடயங்களையும் கையாள்பவராக, முக்கிய தீர்மானங்கள் எடுப்பவராக சுமந்திரன்தான் இருக்கின்றார்.

கட்சிக்குள் சுமந்திரனின் ஆதிக்கத்துக்கு செக் வைக்கக்கூடியராக சிறீதரன் தான் கருதப்பட்டார். இவ்வருட ஆரம்பத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் பொதுச் சபையின் கூட்டத்தில் சுமந்திரனைத் தோற்கடித்து சிறிதரன் கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோது, சுமந்திரனின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது என்றே பலரும் கருதினார்கள்.

பொதுச் சபைக்கூட்டத்தில் இடம்பெற்ற தெரிவுகள்நீதிமன்றத்துக்குச்சென்று, தெரிவுகளுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டபோது, இந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டது. நீதிமன்ற விசாரணைகள் தொடரும் நிலையில், தெரிவுகள் மீண்டும் நடைபெறவேண்டும் என்ற நிலைதான் உருவாகியிருக்கிறது. அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கு இன்னும் சில மாதங்கள் செல்லலாம் என்ற நிலையில், கட்சி இரண்டாக அல்லது மூன்றாகப் பிளவுபடுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடலாம் என்பதுதான் தற்போதைய நிலை.

சிறிதரனும், சுமந்திரனும் ஒரே அணியில் இப்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடுகின்ற போதிலும், தேர்தல் முடிவுகளின் பின்னர் பிளவு பகிரங்கமாகலாம். இப்போது தமிழரசுக் கட்சியின் பட்டியலில் இருவரும் உள்ள போதிலும், ஒருவரை மற்றவர் தோற்கடிப்பதற்கான உபாயங்களுடன்தான் செயற்படுகின்றார்கள்.

தமிழரசுக் கட்சியால் அமைக்கப்பட்ட வேட்பாளர் தெரிவுக்குழுவின் 11 பேரில் ஒன்பது பேர் சுமந்திரனின் ஆதரவாளர்கள். அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி தன்னுடைய ஆதரவாளர்களையே சுமந்திரன் யாழ்ப்பாணப் பட்டியலில் போட்டிருக்கின்றார் என்று அதிருப்தியாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள். இந்த வேட்பாளர் தெரிவில் மாவையும் ஓரங்கட்டப்பட்டுள்ளார். அவர் செல்லாக்காசாகவே வேட்பாளர் தெரிவுக் குழுவில் இருந்தார். வேட்பாளர்களே வேட்பாளர் தெரிவுக்குழுவிலும் இருந்தார்கள் என்பதும் தவறான ஒரு முன்னுதாரணம்.

வேட்பாளர் தெரிவு இடம்பெறும் நிலையில் இரண்டு விடயங்களை சுமந்திரன் தெரிவித்தார். கட்சியின் தீர்மானத்தை மீறி பொது வேட்பாளரை ஆதரித்தவர்கள், கடந்த தேர்தலில் தோல்வியடைந்தவர்களுக்கு இடமளிக்கப்படாது என்பதுதான் அந்த அறிவிப்பு. அதேவேளையில், புதியவர்கள், பெண்களுக்கு இடமளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொது வேட்பாளரை ஆதரித்த சிறிதரன், மாவை சேனாதிராஜா, சரவணபவன், சசிகலா ரவிராஜ் போன்றவர்களை ஓரங்கட்டுவதுதான் இதன் உள்நோக்கம் என்பதைப் புரிந்துகொள்வது கடினமானதல்ல. அதில் மாவையும், சரவணபவனும், சசிகலாவும் கடந்த தேர்தலில் தோல்வியடைந்தவர்கள். சிறிதரன் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டவர் என்பதால் அவரையும் போட்டியிலிருந்து விலகுமாறு சுமந்திரன் கோரினார். ஆனால், சிறிதரன் மறுத்துவிட்டார்.

கடந்த மூன்று பொதுத் தேர்தல்களிலும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் வெற்றிபெற்றவர் சிறிதரன். அதனைவிட, அதிக விருப்பு வாக்குகளை தமிழரசுக் கட்சியில் பெற்றவராகவும் அவர்தான் இருக்கின்றார். சிறிதரனுக்கு கணிசமான – நிரந்தரமான வாக்கு வங்கி ஒன்றுள்ளது. இந்த நிலையில், அவரை வெளியே விடுவது ஆபத்தானது என்பதும் சுமந்திரனுக்குத் தெரிந்திருந்தது.

தன்னுடைய வெற்றிக்கும் சிறிதரனின் வாக்கு வங்கி உதவும் என்பதும் சுமந்திரனுக்குத் தெரியும்.

சிறிதரனை தம்முடன் அரவணைத்துக் கொள்வதற்கு பெருமளவு முதலீட்டுடன் புதிதாக உருவாகும் கட்சி ஒன்று உட்பட வேறு சில கட்சிகளும் தயாராக இருந்தன. இதனால், சிறிதரனை தமிழரசுக் கட்சிக்குள் வைத்தே தோற்கடிக்க வேண்டும் என்பதுதான் சுமந்தரனின் திட்டமாக இப்போதுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இம்முறை இங்கு ஆறு ஆசனங்கள்தான் உள்ளன. அதில் ஐந்து உறுப்பினர்கள் விகிதாசாரப் படி பெற்ற வாக்குகளின் அடிப்படையில் எம்.பி.க்களாகத் தெரிவு செய்யப்படுவார்கள். அதிக வாக்குகளைப் பெறும் கட்சிக்கு போனசாக ஒரு ஆசனம் கிடைக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டிருப்பது, தமிழரசுக்கட்சியிலிருந்து பலர்வெளியேறியிருப்பது போன்றன தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கியை கணிசமாகப் பாதித்திருக்குகிறது. அத்துடன், மாற்றத்தைக் கொண்டுவரப்போவதாகச் சொல்லிக்கொள்ளும் அநுரகுமார திசநாயக்கவின் தேசிய மக்கள் சக்தியும் ஒரு ஆசனத்தையாவது பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மீது மக்களுக்கு அதிகரித்துள்ள அதிருப்தியால் அவர்கள் அநுரவின் கட்சிக்குஅல்லதுடக்ளஸின்கட்சிக்குவாக்களிக்கும் மனப்பான்மையில் இருக்கின்றார்கள். ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் ஒரு ஆசனத்தைப் பெறுவதற்கான வாய்ப்புள்ளது. தொடர்ச்சியாக வெற்றிபெற்றுவரும் சித்தார்த்தனுக்கு தனிப்பட்ட முறையில் வாக்கு வங்கி உள்ளது. அதனைவிட, சஜித் பிரேமதாசதான் ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் கணிசமான வாக்குகளைப் பெற்றவர். பொதுத் தேர்தலிலும் ஒரு ஆசனத்தை யாவது பெற அவர்கள் கடுமையாகப் போராடுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியில் முதன்மை வேட்பாளராக களமிறங்கியிருக்கு யாழ். மாகநர முன்னாள் மேயர் வி.மணிவண்ணனுக்கும் தனிப்பட்ட முறை யில் செல்வாக்குள்ளது. அவரது வருகை கஜேந்திரன்களின் தமிழ்க் காங்கிரஸை அதிகம் பாதிக்கும்.

இந்த நிலையில் தமிழரசுக் கட்சிக்கு ஒன்று அல்லது இரண்டு ஆசனங்கள்தான் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வாக்காளர்கள் முதலில் கட்சிக்கு வாக்களித்துவிட்டு பின்னர் அதில் மூவருக்கு தமது விருப்பத் தெரிவு வாக்கை வழங்கலாம். தன்னுடைய ஆதரவாளர்களான ஏழு பேரை களமிறக்கியதன் மூலம், அவர்கள்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

இலங்கையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகு மார திசாநாயக்க வெற்றிபெற்று, புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார். இந்த நிலையில், வரும் நவம்பர் மாதம் 14ம் திகதி பாராளுமன்றத்தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தல் குறித்து மக்கள் சிலரின் கருத்துக் கள்..



# வடக்கு கிழக்கு மக்களின் கோரிக்கைகளை புதிய அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்

### எம் எம் மஹதி
**செயற்பாட்டாளர்**

தற்போதைய தேர்தலைப் பார்க்கும் போது தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஜனாதிபதி பதவியை தக்க வைத்துக்கொண்டாலும் எதிர் வரும் காலத்தில் அவர்களால் மூன்றில் இரண்டு அல்லது அறுதிப் பெரும்பான்மை பெறுகின்ற அந்த இலக்கினை இலகுவாக அடைய முடியுமா என்கின்ற ஒரு கேள்வி இருக்கின்றது. எந்த விதத்திலும் வேறு ஒரு கட்சியுடன் கூட்டு சேராமல் அவ்வாறான ஒரு நிலைமையை ஏற் படுத்துவது என்பது எந்த விதத்திலும் சாத்தியம் இல்லாத ஒன்று. இருந்த போதிலும் கடந்த கால தேர்தலிலே சஜித்தினுடைய வெற்றிக்கு ரணிலின் தலைமைத்துவமும் அவருடைய பயணமும் அந்த வெற்றியை இல்லாமல் செய்தது என்கின்ற உண்மையை மறுக்க முடியாது.

இந்த நிலையில் எதிர் வருகின்ற தேர்தலில் அதே ரணில் அவர்கள் சஜித்துடன் கூட்டு இணைவதற்கான வாய்ப்புகள் இருந்தும் அந்த வாய்ப்புகளிலே பேசப்பட்ட விடையங்களை பார்க்கின்ற போது அது சஜித்தை களத்தில் இருந்து அகற்றுவதற்கான முனைப்பாகவே ரணிலின் தரப்பினருடைய முயற்சிகள் காணப்பட்டுள்ளது. அந்த வகையில் சஜித் அவர்கள், ‘டெலிபோன்’ சின்னத்தில் தனித்து போட்டியிடுவதற்கான முடிவொன்றினை எடுத்துள்ளார். அந்த வகையில் ஒரு பலமான ஒரு அணியை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் இருந்தும் ரணில் விக்கிரம சிங்க என்ற ஒரு தனிமனிதனால் இல்லாமல் செய்யப்படுகின்றது. ரணில் விக்கிரம சிங்க, பல்வேறு கால கட்டங்களில் பல தோல்விகளை சந்தித்த போதும் தான்தான் இலங்கையின் தலைவராக இருக்க வேண்டும் என்ற ஒரு உறுதிப்பாட்டுடன் இருக்கும் முயற்சியும் அவருடைய செயற்பாடுகளும் எதிர்காலத்தில் இந்த ஐக்கிய தேசிய கட்சி அழிந்து போகக்கூடிய நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆகவே ஒவ்வொருவரும் ஒரு பலமான எதிர்க்கட்சி அமைய வேண்டும் அல்லது ஒரு வெளிப்படையான நல்ல முன்மொழிவுகளை கொண்டு வரக்கூடிய வகையிலான ஒரு ஆட்சி நடைபெற வேண்டும் ஊழல் மோசடிகள், இன மத வேறுபாடுகள் இல்லாத ஒரு சிறப்பான ஆட்சி நடைபெற வேண்டும். அந்த வகையில் சஜித்தினுடைய அணி பலப்படுத்தப்பட வேண்டும்.

### டிலாணி
**சிவில் சமூக செயற்பாட்டாளர்**

நடைபெற இருக்கின்ற பொதுத்தேர்தல்,மக்கள் மிகவும் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார் கள். அதாவது பெண்களின்பங்களிப்பும்அவர்களின் குரலும் பாராளுமன்றில் ஒலிக்க வேண்டும் என்பது அனைவரது கோரிக்கையாகவுள்ளது. மேலும் பாராளுமன்றில் புதிய மாற்றத்தோடு , புதியவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நிலை ஏற்பட வேண்டும் என்பதும் மக்களின் கோரிக்கை.

மேலும் தற்போதைய காலகட்டத்தில் நடை பெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் புதிய பல வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். புதியவர்களின் வரவு பாராளுமன்றத்தின் ஜனநாயக ரீதியான ஒரு வரவாக என்னால் பார்க்கப்படுகிறது. கிழக்கு மாகாணம் அதிக தமிழ் முஸ்லிம்களை கொண்ட மாகாணமாகும் சிறுபான்மை சமூகத்தின் பிரதிநிதித்துவம் இங்கு பாதுகாக்கப்பட வேண்டும். கடந்த தேர்தல்களில் போல் அல்லாது இம் முறை அதிகமான வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் எங்களை போன்றவர்களின் எதிர்பார்ப்பு உரிமைகளை பாதுகாக்கவும் அபிவிருத்தியையும் எதிர்பார்க்கிறோம் .இளைஞர் சமுதாயத்தை கட்டியெழுப்பக் கூடிய ஒரு பாராளுமன்றம் இம் முறை தேர்தல் ஊடாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். ஊழலற்ற புதியதோர் அரசியல் கலாசாரம் இந்த நாட்டில் உருவாக வேண்டும். இதனையே நாமும் எதிர்பார்க்கிறோம். சமூக பொருளாதார அபிவிருத்தி ஊடாக தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து இருப்பை பாதுகாக்க இளம் சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும். அப்போது தான் இலங்கை தேசம் சுபீட்சமான தேசமாக மாறும். பாமர மக்கள் நிம்மதியாக இன மத பேதமற்ற ஐக்கியத்துடன் சுதந்திரமாக சகல உரிமைகளுடனும் வாழக் கூடிய இத் தேர்தல் அமைய வேண்டும் எதிர்பார்க்கிறோம்.


### கே.எஸ். ரட்ணவேல்
**சட்டத்தரணி**

நடக்க இருக்கின்ற பொதுத்தேர்தல் ஆனது, பாராளுமன்றுக்கு உறுப்பி னர்களை அனுப்பு கின்ற ஒரு தேர்தல். அது வருகின்ற நவம்பர் மாதம் 14ம் திகதி நடக்கவுள்ளது. இதற்கான அனைத்தும் ஏற்பாடுகளும் நடந்து கொண்டு இருக்கின்றது. மக்கள் அரசியல் கட்சிகள் இந்த தேர்தலைக் குறித்துதான் பேசிக்கொண்டு இருக்கின்றனர்.

ஜனாதிபதித்தேர்தல் நிறையப்பேர் எதிர் பார்த்ததுக்கு மாறாக ஒரு புதிய அணியைச் சேர்ந்தவரை மக்கள் தெரிவு செய்து இருக் கின்றார்கள். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட புதிய ஜனாதிபதி, நிறைய புதிய விடயங்களை கொண்டு வந்துள்ளார். சில புதிய விடயங்களையும் செயற்பாட்டில் கொண்டு வந்துள்ளார். மக்களுக் கும் பிடித்தமானவற்றை செய்து வருகின்றார்.

அத்துடன் எதிர்த்தரப்பும் சில பிழைகளை விட்டுள்ளனர். அதாவது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் பொருளாதாரத்தைப் பற்றி மட்டுமே சிந்திப்பார்கள் எனக்கருதி ஏனைய விடயங்களில் கவனம் செலுத்தாது விட்டனர். அதாவது கொள்கை ரீதியாக ஊழல், மோசடிகள், அரசியல்வாதிகள் அதிகாரத்தில் உள்ளவர்கள் செய்த மோசடிகள் குறித்து மக்கள் மறந்து விட்டார்கள் என்ற நினைப்பில் தங்களுடைய பிரசாரத்தைக் கொண்டு சென்றனர். இதனால்தான் மக்கள் அவர்களை ஒதுக்கிவிட்டு புதிய ஒருவரை ஜனாதிபதியாக கொண்டு வந்துள்ளனர். இந்த நிலையில் இந்த ஜனாதிபதி அவரைச் சேர்ந்த கட்சியினர், பாராளுமன்ற தேர்தலுக்குத் தயாராகிக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த தேர்தலில் பெரும்பான்மை கிடைத்தால்தான் அரசாங்கத்தைக் கொண்டு நடத்த முடியும். ஆனால் அந்த பெரும்பான்மையை எப்படி அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால், இந்த கட்சி ஊழலை ஒழிப்பதற்கு , ஊழல் செய்தவர்களை கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்துவதும் அத்தோடு பெருமளவில் மோசடி செய்த, பணம் மற்றும் சொத்துக்களை மீள் எடுப்பதற்கான நடவடிக்கையை இந்த புதிய ஜனாதிபதி செய்ய வேண்டும். மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஒரு வெளிப்பாட்டுத் தன்மையுடன் அதன் உண்மைகளைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்துவது போன்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிகளைச் செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்புத்தான் மக்களிடையே இருக்கின்றது. எனவே இப்போது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர், மக்களின் எதிர்பார்ப் புக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்தால்தான் மக்கள்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்



# பாராளுமன்றத் தேர்தலும் தமிழ் மக்கள் முன்னுள்ள தெரிவுகளும்

நவம்பர்-14ஆம் திகதி பாராளுமன்ற தேர்தலுக்கான திகதி இடப்பட்டு உள்ளது. அதேவேளை அக்டோபர் 04-11ஆம் திகதி வேட்புமனு தாக்கல் இடம்பெற்றுள்ளது. நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலை போன்றே, பாராளுமன்ற தேர்தலிலும் அதிகளவு கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் களமிறங்கியுள்ளன. முழு இலங்கைத்தீவிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் உள்ளடங்களாக 690 குழுக்கள் போட்டியிடப்போவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. வடக்கு-கிழக்கும் பொதுத்தேர்தலை மையப்படுத்தி பெரும் குழப்பகரமான சூழலை எதிர்கொண்டுள்ளது. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெளிப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் தேசிய எழுச்சியை அதுசார்ந்திரட்சியை ஒருங்கிணைக்கும் களத்தை தமிழ் அரசியல் கட்சிகள் பொதுத்தேர்தலில் உருவாக்கி இருக்கவில்லை. கடந்த இரு தசாப்த கால ஈழத்தமிழர்களின் அரசியல் அடையாளமாக காணப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எனும் பதிவு செய்யப் படாத கட்டமைப்பு முழுமையாக சிதறடிக்கப் பட்டுள்ளது. அதுமட்டுமன்றி தமிழ் அரசியலில் 75 ஆண்டு கால பாரம்பரியத்தை கொண்ட தமிழரசு கட்சிக்குள்ளும் அதிக குழப்பங்களை அவதானிக்க கூடியதாக உள்ளது. இக்குழப்பகரமான நிலையில், தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றம் எனும் விம்பத்தின் பிரதிபலனை தேசிய மக்கள் சக்தி வடக்கு-கிழக்கிலும் பெற்றுக்கொள்ளுமா எனும் வாதங்களும் பொதுவெளியில் காணப்படுகின்றது. இக்கட்டுரை பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்கள் முன்னுள்ள தெரிவுகளை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வடக்கு-கிழக்கில் யாழ்-கிளிநொச்சி, வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் உள்ளடங்கலாக 250இற்கு மேற்பட்ட அணிகள் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளன. வடக்கு-கிழக்கின் தேர்தல் மாவட்டங்களிற்கு முறையே யாழ்-கிளிநொச்சி 6 ஆசனங்கள், வன்னி 6 ஆசனங்கள், திருகோணமலை 4 ஆசனங்கள், மட்டக்களப்பு 5 ஆனங்கள், அம்பாறை 7 ஆனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. 28 ஆசனங்களுக்கு ஏறத்தாழ 2500 வேட்பாளர்கள், 250இற்கு மேற்பட்ட அணிகள் போட்டியிடுகின்றன. இதில் ஒரு சில அணிகளில் ஒரே குடும்ப பிரதிநிதிகள், ஒரேதெருக்களில்வசிப்போர்களமிறங்கியுள்ளனர். ஒரு சில அணி அரசியல் அதிகாரத்துக்கு போட்டியிடுவதுடன், பலரும் பிரபல்யம், வெளிநாட்டு விசா என இதர பல காரணங்களுக்காக களமிறங்கியுள்ளனர். இது வாக்குகளை சிதறடிக்கும் செயலாகவே அமைகிறது.

யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் மாத்திரமே முழுமையாக தமிழ் பிரதிநித்துவம் பகிரப்படுகிறது. ஏனைய தேர்தல் மாவட்டங்களில் முஸ்லீம் மற்றும் சிங்கள பிரதிநிதித்துவமும் கணிசமாக காணப்படுகின்றது. 2020 பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் முழுமையாக தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டதுடன், திருகோணமலையில் நான்காவது ஆசனத்தை மயிரிழையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் பெற்றுக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ்-கிளிநொச்சி மாவட்ட தேர்தல் தொகுதியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழரசுக் கட்சி ஆகிய பிரதான தமிழ் அரசியல் கட்சிகள் தமது வேட்புமனுவை தாக்கல் செய்திருந்தனர். தமிழரசு கட்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை (06.10.2024) யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளர் விவரங்களை அறிவித்திருந்தன. அவ்முடிவில் அதிருப்தி அடைந்த தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்,







**ஐ.வி.மகாசேனன்**

கொழும்பு மாவட்ட கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் மகளீர் அணி, இளைஞர் அணி செயற்பாட்டாளர்கள் கட்சியை விட்டு வெளியேறி சுயேட்சையாக களமிறங்கி உள்ளனர். யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் தென்னிலங்கை கட்சிகள், தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழு உட்பட ஆகக்குறைந்தது பத்து அணி தாக்கம் செலுத்தக்கூடியதாக அமைகின்றது. எனினும் யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்துக்கு சனத்தொகை விகிதாசார அடிப்படையில் ஆறு ஆசனங்களே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்ட பிரதிபலிப்புகளே வடக்கில் வன்னித் தேர்தல் தொகுதியிலும் கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை தேர்தல் தொகுதிகளிலும் காணப்படுகின்றது. வன்னித் தேர்தல் தொகுதியில் தமிழரசு கட்சி சார்பாக முல்லைத்தீவை சார்ந்த இளம் சட்டத்தரணி ஒருவர் களம் இறங்குவதாக முன்னர் அறிவிக்கப்பட்டது. எனினும் தமிழரசு கட்சியின் தமிழ்த் தேசிய நிலைப்பாடு சார்ந்த சந்தேகத்தினை வெளிப்படுத்தி, இளம் சட்டத்தரணி தான் தேர்தலில் இருந்து ஒதுங்குவதாக அறிவித்துள்ளார். இது வன்னி தேர்தல் தொகுதியில் தமிழரசு கட்சி சார்ந்து எதிரான விமர்சனத்தை உருவாக்கியுள்ளது. திருகோணமலை மற்றும் அம்பாறை தேர்தல் தொகுதியில் தமிழ் பிரதிநிதித்துவம் சார்ந்து எழுந்துள்ள அச்சத்தால் அரசியல் கட்சிகளிடையே கூட்டு முயற்சியை ஏற்படுத்த சிவில் சமூகங்கள் முயற்சியினை மேற்கொண்டிருந்தது. குறிப்பாக திருகோணமலை ஆயர் அவர்களும் இம் முயற்சியில் இறங்கியிருந்தார். எனினும் கட்சிகளின் தேசியப்பட்டியல் ஆசையால், கட்சிகளிடையே பொதுச்சின்னம் என்பதில் உடன்பாடு எட்ட முடியவில்லை. திருகோணமலையில் தமிழரசு கட்சியின் சின்னத்தில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியும் இணைந்து போட்டியிட இணங்கியது. மாறாக அம்பாறை தேர்தல் தொகுதியில் ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியின் சின்னத்தில் தமிழரசு கட்சி இணைந்து செயல்பட மறுத்த நிலையில், அம்பாறையில் கட்சிகள் தனித்தனியாகவே போட்டியிடுகின்றன.

பொதுத்தேர்தல் சார்ந்து வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுள்ள குழப்பகரமான நிலைமைகள் தென்இலங்கை கட்சிகளுக்கு வாய்ப்பாகுமா எனும் சந்தேகங்கள் பொதுவெளியில் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தென்இலங்கையில் விவாதிக்கப்படும் ஜே.வி.பி-யின் பரிமாணமாகிய தேசிய மக்கள் சக்தியின் மாற்றம் சார்ந்த அரசியல் அலை, வடக்கு-கிழக்கிலும் தாக்கத்தை ஏற்படுத்துமா என்ற வாதம் சமகாலத்தில் மேல் எழுந்துள்ளது. இது அடிப்படையில் தமிழ் அரசியல் கட்சிகளிடையே எழுந்துள்ள பிளவுகளும், அதனால் தமிழ் மக்களிடையே உருவாகியுள்ள அவநம்பிக்கை காரணமாக நோக்கப்படுகின்றது. வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு பொதுத் தேர்தல் சார்ந்து உள்ள தெரிவுகளை நுணுக்கமாக அவதானித்தல் அவசியமாகின்றது.

முதலாவது, தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டிய தரப்புகளை சரியாக இணங்காணுதல் அவசியமாகிறது. தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள மாயமான மாற்றம் எனும் வாதத்தை வடக்கு-கிழக்கிலும் ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பி அணியினர் முயற்சி செய்து வருகின்றனர். எனினும் தென்இலங்கை உரையாடும் மாற்றம் உறுதியானதா? மற்றும் இம்மாற்றத்தால் ஈழத் தமிழர்கள் நன்மையடைய கூடியதாக உள்ளதா என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது. இப்பத்தியில், 'இலங்கையில் ஏற்பட்டுள்ளது அமைப்பு மாற்றமா? ஆட்சி மாற்றமா?' எனும் தலைப்பில், ஜே.வி.பி ஏற்படுத்தி உள்ள மாற்றம் என்பது வெறுமணமே ஆட்சி மாற்றம் என்பது விவரிக்கப்பட்டுள்ளது. அதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே கடந்த மூன்று வார கால ஆட்சியின் நடத்தைகளும் அமைந்துள்ளது. தேர்தல் பிரச்சார காலத்தில், தற்போதைய இலங்கையின் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க, தன்னுடைய பெயர் பிறப்புச்சான்றிதழில் மாத்திரம் இருப்பதே தனக்கு போதும் எனவும், முன்னைய ஆட்சியாளர்கள் வீதிகள் அரச கட்டிடங்களில் தமது பெயர் பொறித்துள்ளமையை விமர்சித்திருந்தார். எனினும் தபால் திணைக்களம் தனது 150வது ஆண்டு தினத்தை முன்னிட்டு காபந்து அரசாங்கத்தின் பிரதமர் மற்றும் வெளிவிவாகர அமைச்சரின் புகைப்படங்களை தாங்கிய தபால் முத்திரையை வெளியிட்டுள்ளது. கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பணத்தாளில் தனது படத்தை வெளியிட்டமை மற்றும் அரச கட்டிடங்களுக்கு தமது பெயரை சூடியமையையும் ஜே.வி.பி விமர்சித்திருந்தது. ஜே.வி.பி-யின் காபந்து அரசாங்கத்தின் பிரதிநிதிகள் தமது படங்களை தபால் முத்திரையில் பதிப்பு செய்வது மாற்றம் சார்ந்த உரையாடலை கேள்விக்கு உட்படுத்துவதாக அமைகின்றது. இது ஜே.வி.பி சார்ந்த அதன் மாற்றம் சார்ந்த அரசியல் உரையாடலின் பொது விம்பப் பிறழ்வை வெளிப்படுத்துகிறது. அதேவேளை ஈழத்தமிழ் அரசியலுக்கு ஜே.வி.பி பொருத்தமானவர்களா என்பதையும் ஈழத் தமிழர்கள் சிந்திக்க வேண்டியுள்ளது. கடந்த காலங்களில் ஜே.வி.பி-யின் இனவிரோத செயற்பாடுகள் தொடர்பில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமையின்மை

# தமிழ் மக்களின் இருப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது

இலங்கையின் பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யும் பணிகள் இலங்கையின் தென் பகுதிகளில் மட்டுமல்ல வடக்கு கிழக்கிலும் வேகமாக நடைபெற்றன. குறிப்பாக வடகிழக்கில் உள்ள தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் தமது வாக்கு அரசியலுக்கான போட்டிகளையும் வெட்டுக்குத்துகளையும் முன்னெடுத்த நிலையில் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.



வடகிழக்கில் உள்ள தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் கட்சிகள் இம்முறையும் தமது சொந்த நலனும் தமது கட்சிசார்ந்த நலன் மட்டுமே முன்நிறுத்தி, வேட்புமனுக்களை தாக்கல்செய்துள்ளது.

தமிழ் தேசிய கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையானது கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் இருப்புசார்ந்த விடயங்களுக்கு பாரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது. குறிப்பாக பாராளுமன்ற தேர்தலில் கிழக்கில் தமிழ் தேசிய கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள் எதிர்காலத்தில் தமிழர்களின் இருப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடுமோ என்ற அச்ச நிலை இன்று தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளில் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுவந்த நிலையில் தற்போதைய நிலையில் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களே தெரிவு செய்யப்படும் நிலையிருக்கின்றது.இம்முறை அது இரண்டாக குறையும் சாத்தியமும் காணப்படுகின்றது. தமிழ் தேசிய அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள பிளவு இந்த தாக்கத்திற்கு காரணமாக அமைகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் தமிழ் தேசிய அரசியல் என்பது பலமானதாக இருக்கவேண்டும்.இந்த நாட்டில் தமிழர்களின் நீண்டகால கோரிக்கைக்கு சரியான தீர்வு கிடைக்கும் வரையில் தமிழர்கள் அரசியல் ரீதியாக பலமாகயிருக்கவேண்டியது கட்டாயமாகும்.

இன்று வடகிழக்கில் காணப்படும் தமிழ் தேசிய அரசியலின் போக்கானது எதிர்காலத்தில் இலங்கையின் சிங்கள தேசிய கட்சிகளை நோக்கி தமிழ் மக்களை நகரவைக்கும் நிலைமையே காணப்படுகின்றது.இன்று வடகிழக்கில் ஏற்பட்டுள்ள ஜேவிபி அலையானது வடகிழக்கு தமிழ் மக்களுக்கு பாரிய ஆபத்தான விடயமாக மாற்றம்பெறும் நிலைமை காணப்படுகின்றது.

இன்று வடகிழக்கில் உள்ள கற்ற சமூகம் ஜேவிபி என்ற கட்சிதான் தமிழர்களுக்கு விமோசனம்தருவதுபோன்றமனநிலையில்அதற்கு ஆதரவான அணிதிரட்டல்களை முன்னெடுத்து வருகின்றது.இது தமிழ் தேசிய அரசியல் சக்திகள் மீது நம்பிக்கையிழந்த நிலையிலேயே இன்று சிங்கள கட்சிகளை நோக்கி நகரும் நிலைமை ஏற்பட்டுள்ளது.இதற்கான பொறுப்பினை தமிழ் தேசிய அரசியல் சக்திகளே ஏற்கவேண்டும். இவ்வாறானவர்களை தெளிவுபடுத்தவேண்டிய பொறுப்பு வடகிழக்கில் உள்ள தமிழ் தேசிய சக்திகளுக்கு உள்ளது.ஆனால் அந்த சக்திகள் மீதும் இன்று தமிழ் மக்கள் நம்பிக்கையிழக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

குறிப்பாக கடந்த ஜனாதிபதி தேர்தலில் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு தமிழ் மக்களுக்கான குரலாகவும் தமிழ் தேசிய அரசியலை ஒருங்கிணைத்து அடுத்த கட்டத்திற்கு கொண்டுசெல்லும் வடகிழக்கில் தமிழ் தேசிய அரசியலை நிலைநிறுத்துவதற்காகவும் தமிழர்களின் உரிமைக்காகவும் செயற்படும் என எண்ணியிருந்த நிலையில் இன்று அதன் செயற்பாடுகள் என்பது கேள்விக்குறியாகி நிற்கின்றன.



சங்கு சின்னமானது தமிழர்களையும் தமிழ் தேசியத்தினையும் ஒருங்கிணைக்கும் சின்னம் என்று கூறப்பட்டபோதிலும் இன்று கடந்த காலத்தில் ஒட்டுக்குழுக்களாக செயற்பட்டவர்களுக்கு வாக்கு பெற்றுக்கொடுக்கும் சின்னமாகவே நோக்கப்படுகின்றது.இதன்காரணமாக எதிர்காலத்தில் தமிழ் தேசிய அரசியலிலும் கட்டமைப்பு செயற்பாடுகளிலும்தமிழர்கள்நம்பிக்கையிழக்கும் நிலைமை காணப்படுகின்றது.

**மட்டு.நகரான்**

அதிலும் கடந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பினைவழிநடாத்திய இருவர்புளோட் கட்சி ஊடாக சங்கு சின்னத்தில் தேர்தலில் குதித்துள்ளமையானது எதிர்காலத்தில் தமிழர்களின் ஒற்றுமை தொடர்பில் சிந்திக்கும் தமிழர்களுக்கு பாரிய பின்னடைவாகவே நோக்கவேண்டியுள்ளது. தமிழ் மக்கள் பொதுச் சபை சார்பில், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்களில் ஒருவரான அரசியல் பத்தியாளர் யதீந்திரா, புளொட்டின் சார்பில் இம்முறை திருகோணமலை மாவட்டத்தில் 'வீட்டு'ச் சின்னத்தில் போட்டியிடுகிறார். அவர், 2015 பொதுத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில், கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டவர்.இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கையொப்பம் இட்ட வசந்தராஜா என்பவர் புளோட் ஊடாக சங்கு சின்னத்தில் களமிறக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த காலத்தில் தமிழ் தேசிய அரசியலுக்கு எதிராக செயற்படும் வகையில் சுயேச்சை குழுக்களை உருவாக்கி வாக்குகளை பிரிப்பதில் முக்கிய பங்காற்றிவர்.

இவ்வாறான நிலையில் உள்ளவர்களைக் கொண்டு கிழக்கில் முன்னெடுக்கப்படும் தமிழ் தேசியம் சார்ந்த பணிகள் ஒருபோதும் வெற்றியளிக்காது.இவ்வாறானவர்களின் செயற்பாடுகள் தமிழ் தேசிய அரசியலை சிதைக்கும் நிலைக்கே கொண்டுசெல்லும்.

இவ்வாறான நிலையில் கிழக்கில் தமிழ் தேசிய அரசியலை முன்னிறுத்துவதற்கான செயற்பாடுகளை இன்றைய காலத்தில் முன்கொண்டு செல்லவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.இன்று பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டு முடிந்த நிலையில் நிலையில் தமிழ் தேசிய அரசியலை கேள்விக்குட்படுத்தவும் வாக்கு சரிவினை ஏற்படுத்தவும் பல்வேறு சுயேச்சை குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளதுடன் பெருமளவான சிங்கள கட்சிகளும் தமது வேட்பு மனுக்களை தமிழர்கள் ஊடாக தாக்கல்செய்துவருகின்றது.

இன்று கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் வீட்டுச்சின்னமும் சங்கு சின்னமும் பலம்வாய்ந்த அணிகளாகவுள்ள நிலையில் மறுபுறத்தில் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியும் ஓரளவு பலம் பெற்று நிற்கின்றது.இதேபோன்று சிங்கள அரசியல் கட்சிகளில் சிலவும் கணிசமான வாக்குகளை பிரிக்கும் நிலைக்குவந்திருக்கின்றது.இவ்வாறான நிலையில் தமிழ் தேசிய அரசியலை பாதுகாப்பதற்கான வழிவகைகள் குறித்து சிந்திக்க வேண்டிய நிலையிலிருக்கின்றோம்.




தமிழர்கள் தமக்கான இருப்பினை பாதுகாக்கவேண்டுமானால் கிழக்கில் தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தினை பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.வெறுமனே வாக்கு அரசியலைமட்டும் செய்து தமிழர்கள் மத்தியில் முன்னெடுக்கும் செயற்பாடுகள் என்பது தமிழ் தேசிய அரசியலில் இருந்து தமிழர்களை தூரக்கொண்டுசெல்லும் நிலைமையினையே உருவாக்கும்.இவ்வாறான நிலைமையினை கையாள வேண்டிய பொறுப்பு தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் தேசிய பற்றாளர்களுக்கு உள்ளபோதிலும் இன்று அவர்களும் கட்சி அரசியல்சார்ந்து செயற்படுவதன் காரணமாக தமிழ் தேசிய அரசியலை முறைப்படுத்தமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையினை உணர்ந்து தமிழ் தேசிய கட்சிகள் தமது தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.கடந்தகாலத்தில் தமிழ் தேசிய கட்சிகளுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளும் வெட்டுக்குத்துகளுமே பிள்ளையான் போன்றவர்கள் வேரூன்ற காரணமாக அமைந்தது.அவ்வாறான நிலைமைகள்மேலும் வளர்ந்து ஒட்டுக்குழுக்களின் கைகளில் கிழக்குமாகாணம் சென்றுவிடாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு தமிழ் தேசிய அரசியலில் பயணிக்கும் அனைவருக்கும் உள்ளது.இன்று கிழக்கில் பிரதான அரசியல்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# யார் ஆட்சிக்கு வந்தாலும்

# தமிழருக்கு எதிரான நிலை அபகரிப்பு தொடரும்

## ஹஸ்பர் ஏ ஹலீம்



திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திரியாய் பகுதியில் உள்ள வயல் தனியார் விவசாய காணிக்குள் பிக்குவின் ( பௌவுத்த மதகுரு) அடாவடித்தனம் தொடர்ந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தங்களுக்கு சொந்தமான காணிக்குள் விவசாய பெரும்போக நெற் செய்கைக்கான இயந்திரம் மூலமான உழுதுதல் நடவடிக்கையின்



போது காணிக்குள் புகுந்த பௌத்த பிக்கு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக புல்மோட்டையை சேர்ந்த ஜெ.புஹாரி தெரிவிக்கிறார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிப்பதாவது "வளத்தாமலைப்பகுதியில்காலம்காலமாகஎங்கள் விவசாய காணியில் விவசாயம் செய்து வந்தோம் தற்போது பௌத்த பிக்குவினால் பெரும்போகச் செய்கைக்காக உழுதுதலை மேற்கொள்ளும் போது தடுத்து நிறுத்தினார். இம் முறை குத்தகைக்கு எனது சிறிய தந்தைக்கு காணியை வழங்கியிருந்தேன் இருந்த போதிலும் பௌத்த பிக்குவின் அட்டகாசம் காரணமாக காவல்துறைக்கு முறைப்பாடு செய்த போது அதனை மீறியும் பிக்கு தடையை ஏற்படுத்தி வருகிறார். இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது" என்றார்.



புனித பூமி என்ற போர்வையில் விவசாய காணிகளை தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தம் என பல ஏக்கர்களை அடாத்தாக அபகரிப்புச்செய்யும்அரிசிமலைதிரியாய்பகுதியில் உள்ள குறித்த பௌத்த பிக்குவான பாணமுறே திலகவன்ச தேரர், கடந்த கோட்டாபாயவின் ஆட்சி காலத்தில் ஜனாதிபதியின் கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியின் உறுப்பினராக செயற்பட்டு வந்தவர் மட்டுமல்லாது வடக்கு கிழக்கு பௌத்த சங்கத்தின் தலைவர் எனவும் தெரிய வருகிறது.

அரசாங்கத்தினால் இவருக்கு மெய்ப்பாது காவலரும் (MSD) வழங்கப்பட்டுள்ளது . ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆட்சியின் பின் அதிரடியாக முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு நீக்கப்பட்ட போதும் இவ்வாறு பௌத்த பிக்குவுக்கு மாத்திரம் ஏன் பாதுகாப்பு வழங்கப்படுகிறது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.



திரியாய்க் கிராமத்தின் பூர்விக வயல் நிலங்களில் முக்கிய வயல் வெளிகளான வளத்தாமரை, ஆதிக்காடு, ஒட்டுப்புல்மோட்டை, நீராவிக்கண்டல், வேடன்குளம் என உள்ளடக்கிய வயல் வெளிகளில் மக்கள் பரம்பரை பரம்பரையாக வயற்செய்கை மேற்கொண்டு வரும் நிலையில், புல்மோட்டை அரிசிமலை பகுதியில் உள்ள குறித்த பிக்குவினால் அடாவடியாக கையகப்படுத்தப்பட்ட 88 ஏக்கர் பொதுமக்களின் உறுதிக் காணியில் விவசாயம் மேற்கொள்ள பாரிய சிரமத்தை மக்கள் எதிர்கொள்கின்றனர்.



இக்காணிகள் அனைத்துமே உறுதிக்காணிகள் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். வருடா வருடம் பெரும் போக வயற்செய்கையின் போதும் இவ்விதமான நெருக்கடிகளை மக்கள் எதிர்கொள்வதும் பின் பிக்குவின் அடாவடியினால் பயந்து இருப்பதுமான அவல நிலையில் மக்கள் இருக்கின்றனர்.

நீதிமன்றினால் மக்களிடம் காணிகளை கையகப்படுத்தக் கோரியும் பிக்கு அடாவடியான முறையில் இச் செயற்பாட்டை முன் எடுப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பூர்வீக வயல் நிலங்களில் ஒன்றான வளத்தாமலையடி, ஆதிக்காடு, வேடன் குளம், போன்ற 880 ஏக்கர் விஸ்தீரணமுடைய 125 வருடப் பழமை வாய்ந்த ஆங்கிலேயர் காலத்து உறுதி உடைய காணிகள் ஆகும்.



1985ம் ஆண்டு வரை அந்நிலங்களில் வயற்செய்கை மேற்கொண்டு வந்த நிலையில் 1985ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின் போது மக்கள் பல்வேறு மாவட்டங்களிற்கு இடம் பெயர்ந்தனர்.

தொடர்ந்து 1990ம் ஆண்டு மீண்டும் மக்கள் வந்து இக்காணிகளில் மானாவாரி நெற் செய்கையை செய்தனர். தொடர்ந்து ஏற்பட்ட இனக்கலவரத்தினைத்தொடர்ந்து இடம்பெயர்ந்து பின் 2002ம் ஆண்டு மீண்டும் தமது சொந்த நிலங்களுக்கு மீளக்குடியமர்த்தப்பட்டனர். இருந்த போதும் போரினால் வாழ்வாதாரங்களை இழந்த விவசாயிகள் 2020ம் ஆண்டு மீண்டும் தமது வயல் நிலங்களில் வயற்செய்கை மேற்கொள்ளச் சென்ற வேளை புல்மோட்டை அரிசி மலைப் பகுதியில் உள்ள பிக்குவினால் மக்களின் அனைத்துக் காணிகளும் அடாவடியான முறையில் கையகப் படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு கடுமையான அச்சுறுத்தல்களையும் மேற்கொண்டு வந்தார்.

2022ம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கில் மக்களின் காணிகளை மக்களிடம் கையளிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதும் கடந்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# வெளியார் உற்பத்தி முறை

துரைசாமி நடராஜா

பெருந்தோட்டத் தொழிற்றுறை எதிர் கொள்ளும் சவால்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் இத்தொழிற்றுறையை அழிவிலிருந்தும் மீட்டெடுப்பதோடு, தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கும் வித்திட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதனிடையே கடந்தகால பல்வேறு அரசாங்கத்தின் கொள்கைத் தடைகள் பெருந்தோட்டத் துறையின் முன்னேற்றத்தைத் தடுத்து வளர்ச்சிக்கான சாத்தியத்தை குறைந்துள்ளதாகவும் எனவே இது தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான புதிய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமெனவும் முதலாளிமார் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



பெருந்தோட்டத் தொழிற்றுறை இந்நாட்டின் முதுகெலும்பைப் போன்றதாகும். ஒரு காலத்தில் நாட்டின் தேசிய வருவாயில் கணிசமான வகிபாகத்தினை இத்தொழிற்றுறை கொண்டிருந்தது. 1960 ம் ஆண்டிற்கும் 1970 ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பெருந்தோட்டத் துறையின் மூலமே நாட்டின் 85 வீதமான வெளிநாட்டு செலாவணியை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. எனினும் 1980 மற்றும் 89 காலப்பகுதியில் இத்துறையின் முக்கியத்துவம் குறைந்து செல்லும் ஒரு போக்கினைக் கொண்டிருந்ததாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர். 1982 இல் நாட்டில் பயிர் செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 28 வீதமான நிலமே பெருந்தோட்டப் பயிர்செய்கைக்கு உட்பட்டிருந்தது. நாட்டின் ஏற்றுமதியில் 45 வீதம் பெருந்தோட்ட உற்பத்திகளின் வகிபங்காக இருந்தது. இதேவேளை 1981 இல் இலங்கையில் தொழில் புரிந்த தொழிலாளர்களில் 16 வீதமானோர் பெருந்தோட்டங்களின் பயிர்ச்செய்கை, பதனிடல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். இவைதவிர மறைமுகமாகவும் பல்லாயிரக்கணக்கானோர் தேயிலைத் தொழிற்றுறையில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1980 தொடக்கம் 2002 வரையான காலப்பகுதியில் நாட்டின் சில மாவட்டங்களில் தேயிலை பயிரிடப்பட்ட பரப்பளவு பின்வருமாறு அமைந்திருந்தது. இதனடிப்படையில் 1980 இல் கண்டி மாவட்டத்தில் 71,105, நுவரெலியா மாவட்டத்தில் 39,930, பதுளை மாவட்டத்தில் 34,368, மாத்தளை மாவட்டத்தில் 7,142 ஹெக்டேயரில் தேயிலை உற்பத்தி இடம் பெற்றது. இதேவேளை 2002 இல் கண்டி மாவட்டத்தில் தேயிலை உற்பத்தி 18,667, நுவரெலியா மாவட்டத்தில் 50,266, பதுளை மாவட்டத்தில் 17,714, மாத்தளை மாவட்டத்தில் 5,130 ஹெக்டேயரில் இடம்பெற்றது. பொதுவாக நோக்குகையில் 1980 ம் ஆண்டு 211,256 ஹெக்டேயரில் தேயிலை உற்பத்தி இடம்பெற்ற நிலையில் 2002 ம் ஆண்டில் 193.925 ஹெக்டேயர் பரப்பளவில் தேயிலை உற்பத்தி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சுதந்திர வர்த்தக வலயம்**

இதேவேளை 1978 ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் தேயிலை வர்த்தகத்திலும் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தி இருந்தமையை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. அதுவரை காலமும் தேயிலை, தெங்கு, இறப்பர் பொருட்களின் ஏற்றுமதியே இலங்கையின் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான ஏற்றுமதிப் பொருளாக இருந்து வந்துள்ளது . எனினும் 1978ம் ஆண்டின் பின்பு ஏற்படுத்தப்பட்ட சுதந்திர வர்த்தக வலயம், மாற்றுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான ஊக்குவிப்புக்கள் என்பனவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான குடிப்பெயர்வுகள் போன்றனவும் வெளிநாட்டு வருமான கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தி இருந்ததாக தகவல்கள் வலியுறுத்துகின்றன. இதன் காரணமாக இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு வருமானத்தில், வெளிநாட்டு வேலை வாய்ப்பில் கிடைக்கின்ற வருமானம் முதன்மையானதாகவும், ஆடை ஏற்றுமதி இரண்டாவது நிலையிலும், தேயிலை ஏற்றுமதி மூன்றாவது நிலையிலும் காணப்பட்டதாக பேராசிரியர் ஏ.எஸ். சந்திரபோஷ் தனது கட்டுரையொன்றில் சுட்டிக் காட்டுகின்றார்.

அத்துடன் 1972 ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட காணி உச்ச வரம்பு சட்டமும் அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகளும் தேயிலைக் காணிகளின் உடைமைகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதற்கு உந்துசக்தியாக அமைந்தன. காணி உச்சவரம்பு சட்டத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களாயின் 10 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தனியுடைமைகளும், பெருந்தோட்டப் பயிர்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களாயின் 20 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தனியார் உடைமைகளும் நிலச்சீர்திருத்த ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டதும் தெரிந்ததாகும். 1972 ம் ஆண்டு சிறியளவிலான பெருந்தோட்டக் காணிகளே சுவீகரிக்கப்பட்ட நிலையில் 1975 ம் ஆண்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் இரண்டாவது நடவடிக்கையின்போதே பெரும்பாலான பெருந்தோட்டக் காணிகள் சுவீகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாம். பெருந்தோட்டதேயிலை விளைநிலங்கள் படிப்படியாக குறைந்து வரும் நிலையில் அபிவிருத்தி என்னும் போர்வையில் இத்தேயிலை விளைநிலங்கள் சுவீகரிக்கப்பட்டமையும் தெரிந்ததேயாகும். இது தொடர்பில் பல கண்டனங்களும் மேலெழுந்த நிலையில் இதன் பின்புலத்தில் இனவாத சிந்தனைகள் மறைந்திருப்பதாகவும் கருத்துக்கள் பலவும் முன்வைக்கப்பட்டு வந்தன.

**பிரித்தானியர் சாமர்த்தியம்**

இதேவேளை பெருந்தோட்டத் தொழிற்றுறையில் தொழில் புரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் ஒரு வீழ்ச்சிப் போக்கினையே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதற்கேற்ப 1980 இல் தேயிலைப் பெருந்தோட்டங்களில் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 541,971 ஆகவிருந்தது. இவ்வெண்ணிக்கையானது 1990 இல் 408,784 ஆகவும், 2000 இல் 277,886 ஆகவும், 2005 இல் 246.478 ஆகவும், 2010 இல் 212,826 ஆகவும், 2015 இல் 158,322 ஆகவும் காணப்பட்டது. இதேவேளை தனியார் கம்பனிகள், பெருமளவு தொழிலாளர்களைவேலைக்கமர்த்தும்பிரித்தானியர்களின் சாமர்த்தியத்தை கொண்டவர்களாக இருக்கவில்லை. இதனால் மறைமுகமாக கணிசமான ஆண் தொழிலாளர்களை ஒய்வு பெறவேண்டிய வயதிற்கு முன்னதாகவே ஒய்வூதியங்களை வழங்கி ஆட்குறைப்பு வேலைகளை தனியார் கம்பனிகளின் முகாமைத்துவம் தீவிரப்படுத்தியதாகவும் கருத்து வெளிப்பாடுகள் இருந்து வருகின்றன.

1958, 1977, 1981 ஆகிய ஆண்டுகளில் மலையக மாவட்டங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் பாதிப்பிற்கு உள்ளானதாலும், 1972 ம் ஆண்டில் பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்ட வேலையின்மை பிரச்சினை, உணவுப் பற்றாக்குறை என்பவற்றால் ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாகவும் கணிசமான பெருந்தோட்ட மக்கள் வடமாகாணத்திற்கு சென்று குடியேறினர். இத்தகையோர் இலங்கைத் தமிழர் செறிந்து வாழும் வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் குடியேறிய நிலையில் காலப்போக்கில் இந்திய, மலையக அடையாளங்களைக் கைவிட்டு உள்ளூர் மக்களுடன் கலந்துவிடும் தன்மையும் காணப்பட்டது. இவ்வாறான தொழிலாளர் இடம்பெயர்வும் பெருந்தோட்ட தொழிற்றுறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி காண்பதற்கு வலுசேர்ப்பதாக அமைந்தது. 1981 ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டு அறிக்கைக்கேற்ப 75,000 பேர் வரை வடமாகாணம் சென்று குடியேறி இருந்ததாக அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.



இலங்கை வாழ் இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் 1971 முதல் 1984 ம் ஆண்டு வரை பெருமளவில் தாயகம் திரும்பி இருந்தனர். இதற்கேற்ப 1971 இல் 25,384 பேரும், 1973 இல் 41,153 பேரும், 1975 இல் 24,570 பேரும், 1977 இல் 39,818 பேரும், 1980 இல் 18,867 பேரும், 1983 இல் 32,526 பேரும் தாயகம் திரும்பி இருந்தனர். இதேவேளை 1971 - 1984 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 446,338 பேர் தாயகம் திரும்பி இருந்தமையும் தெரிந்ததாகும். இத்தகைய நிலைமைகளும் பெருந்தோட்டத் தொழிற்றுறையில் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன.

**மீறப்படும் சரத்துக்கள்**

பெருந்தோட்ட தொழிற்றுறையில் கம்பனிகளின் ஆதிக்கம் வலுப்பெற்று வருகின்ற நிலையில் தொழிலாளர்கள் தொழில் ரீதியாக கசக்கிப் பிழியப்படுவதாகவும், கூட்டு ஒப்பந்தத்தின் சரத்துக்கள் பலவற்றையும் கம்பனிகள் மீறி வருவதாகவும் தொடர்ச்சியாகவே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதனிடையே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் இழுபறி நிலையில் இருந்து வரும் நிலையில் வெளியார் உற்பத்தி முறைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியதன்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# தமிழர்களுடன் இந்தியா ஒரு போதும்
# இணக்கத்தை ஏற்படுத்தாது:

**ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் மோதலால் மத்திய கிழக்கில் விரிவடையும் போர், ஈழத் தமிழர் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து இலக்கு ஊடகத்திற்கு தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திய சமூக நீதி ஊடகம் மையத்தின் தலைவர் ஊடகச் செம்மல் பவா சமத்துவன் அவர்கள் வழங்கிய செவ்வி**



**ஒரு வருடப்போரில் இஸ்ரேல் ஏன் இன்னும் வெற்றி பெற முடியவில்லை?**

கடந்த 2023 அக்டோபர் 7இல் இஸ்ரேலில் புகுந்து தாக்குதலை நடத்தியது ஹமாஸ். பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் உள்ள ஹாமாசை ஒழித்தே தீர வேண்டும் என்ற நோக்கத்துடன் களமிறங்கியது இஸ்ரேல். ஆயினும் ஓராண்டு நிறைவுற்ற நிலையிலும் இஸ்ரேல் தான் நினைத்த அளவிற்கு இந்த போரில் வெற்றி பெற முடியவில்லை.



காஸாவின் ஹமாஸ் போராளிகளுக்கு ஆதரவாக ஏமனில் உள்ள ஹவுதி அமைப்பும், லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல்களை நடத்தியதால், போர் விரிவடைந்து தற்போது மத்திய கிழக்கு பிராந்தியமே பெரும் பதற்றத்துக்கும் பாதிப்புக்கும் ஆளாகி வருகிறது.

லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பிற்கு ஆதரவளித்து வந்தது ஈரான். ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் இஸ்மாயில் ஹனியேவை தங்கள் மண்ணில் வைத்தே இஸ்ரேலின் உளவு அமைப்பான “மொசாட்“ கொலை செய்ததால் இப்போது ஈரானும் இஸ்ரேலுக்கு எதிரான போரில் குதித்து விட்டது. இதனால் போராளி குழுக்களுக்கு எதிரான இஸ்ரேலின் தாக்குதல் நாடுகளுக்கு இடையேயான போராக மாறி வருகிறது.

இஸ்ரேலின் வலிமையான “அயன் டோம்” எனும் தற்காப்பு அமைப்புகளை மீறி, ஈரான் வீசி வரும் சக்தி வாய்ந்த ஏவுகணைகள் இஸ்ரேலில் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. இதனால் அதிர்ச்சியுற்ற இஸ்ரேல் ஈரானுக்கு கடுமையாக எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இது குறித்து இஸ்ரேல் இராணுவ தொடர்பாளர் யோவ் கேலண்ட் 10-10-2024 திகதியிட்ட தனது X தளப் பதிவில், “..... ஈரான் மீதான எங்கள் தாக்குதல் மிகவும் கொடியாதாகவும் துல்லியமாகவும் இருக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக எங்கள் தாக்குதல் மிகவும் ஆச்சரியமானதாக இருக்கும். என்ன நடந்தது எப்படி நடந்தது என உலகில் யாரும் அதை புரிந்து கொள்ள முடியாது.” எனத் தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேல் ஈரானின் அணுசக்தி நிலையங்களை குறி வைத்தே இவ்வாறு கூறுவதாக சர்வதேச அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். இஸ்ரேல் நினைத்ததைப் போல் காஸா போராளிகளுக்கு எதிரான தாக்குதலாக இது முடியாமல், மத்திய கிழக்கு பிராந்தியமே போர் வளையத்திற்குள் வந்து மூன்றாவது உலகப்போர் மூழுமோ என உலகம் கவலைப்படும் அளவிற்கு நிலைமை சென்று விட்டது.

**கடந்த ஒரு வருடப்போரில் படைத் துறை மற்றும் ராஜதந்திர ரீதியாக இஸ்ரேல் சாதித்தது என்ன?**

அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற உலக வல்லரசுகளை விடவும் வலிமையான துறைகளையும் சாதனங்களையும் , இஸ்ரேல் கொண்டுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இராஜதந்திர அளவில் அது தோல்வியை தழுவி வருகிறது என்றுதான் கூற வேண்டும்.

காஸாவில் நிகழ்த்தப்படும் படுகொலைகளுக்கு எதிராக உலகெங்கும் எழுந்து வரும் கண்டனங்கள் இதைத்தான் நமக்கு உணர்த்துகின்றன. ஐநா பொதுச் செயலாளரும் இதனை வெகுவாக கண்டித்துள்ளார்.

இதனால் எரிச்சலுற்ற இஸ்ரேல் “.. ஐ.நா பொதுச் செயலாளர் இனி எங்கள் நாட்டில் காலடி வைக்கவே கூடாது ..!” என அடாவடியாக கருத்து தெரிவித்திருக்கிறது. இதற்கு மேலும் லெபனானில் உள்ள ஐநாவின் சேவை மையங்கள் மீது (10 -10-2024) தாக்குதலையும் நடத்தியுள்ளது இஸ்ரேல்.

தனக்கு எதிராக யாரும் கருத்து கூறவே கூடாது என்ற இந்த நிலைப்பாட்டால் இஸ்ரேல் தனிமைப்பட்டு வருகிறது. லாவோஸில் நடைபெற்ற ஆசியான் மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய பிரதமர் மோடி “....போர்க்களத்தில் எந்த பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. அமைதி மற்றும் சமாதான முயற்சிகளின் மூலமே எதற்கும் விடை தேட வேண்டும்..! என கூறியிருக்கிறார். இது இஸ்ரேலுக்கான கருத்தாகவே நாம் கொள்ள வேண்டும்.

**மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகளில் உள்ள மக்களுடன் நெருங்கி செயற்பட வேண்டும் எனக்கூறும் இந்தியா, ஏன் ஈழத்தமிழருடன் எந்தவிதமான தொடர்பையும் பேணுவதில்லை.**

இந்தியா இன்று 140 கோடி மக்களை கொண்டு உலகின் அதிக மக்கள் தொகை வாழும் நாடாக விளங்கி வருகிறது. அது மட்டுமல்லாமல் அணு ஆயுதங்களைக் கொண்ட நாடாகவும், நிலவில் விண்கலம் பதித்த நாடாகவும், பொருளாதார வலிமைமிக்க உலகின் ஐந்தாவது நாடாகவும் முன்னேறி வருகிறது.

கடந்த 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சி 8.4 சதவீதமாக இருந்தை உலக நாடுகள் ஆச்சரியமாக பார்த்தது. இந்தியா இப்படியே வளர்ந்து வந்தால் எதிர்வரும் 2027 ஆம் ஆண்டில் ஜெர்மனி ஜப்பான் போன்ற முன்னேறிய நாடுகளையும் பின் தள்ளிவிடும் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

வலிமை மிக்க இந்தியா என்ற முன்னெடுப்பிற்காக இந்தியா அதன் வெளியுறவு கொள்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. இந்தியாவின் வெளியுறவு கொள்கை என்பது தேசிய நலன்களை பாதுகாத்தல் அதை மேம்படுத்துதல் நாடுகளிடையே பரஸ்பர உடன்பாடு பன்னாட்டு உறவுகளில் தேசிய நலன்களுக்கான நன்மைகளை தேடுதல் என்பது ஆகும்.

இதையொட்டியே மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியா கண்டத்தில் உள்ள மக்களுடன் இணக்கமான உறவை பேணுவதற்கு நாட்டம் தெரிவித்துள்ளது. ஒரு நாட்டின் வெளியுறவு கொள்கையை செயல்படுத்துவதில் ஆட்சியில் உள்ள கட்சிகளின் கருத்துக்களும் கொள்கைகளும் ஒன்றிப்போவதையே ஆட்சியாளர்கள் விரும்புவார்கள் . இந்த வகையில் மூன்றாவது முறையாக இந்தியாவில் ஆட்சி அமைத்துள்ள பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு ஒரே நாடு, ஒரே மதம்,ஒரே மொழி, ஒரே சட்டம் என்கிற தனது தாய் அமைப்பான ஆர்எஸ்எஸ் இன் குறிக்கோள்களை செயல்படுத்துவதில் முனைந்திருக்கிறது.

இந்த ஆர் எஸ் எஸ் இன் சித்தாந்தங்களை



செயல்படுத்துவதற்கு, தமிழ்நாடும் தமிழர்களும் ஒரு போதும் இசைவளிக்க மாட்டார்கள் என்பது இந்திய அரசுக்கு தெரியும். தமிழ்நாடும் தமிழரும் இந்தியத்திற்கு எதிரானவர்கள் என்கிற கருத்து அவர்களுக்குள் வலுவாகவே பதிந்திருக்கிறது. அதனால் இந்தியத் தமிழர்கள் ஈழத் தமிழர்கள் உலகத் தமிழர்கள் என யாருடனும் இணக்கமான உறவையோ செயற்பாட்டையோ இந்திய ஆட்சியாளர்கள் எப்போதும் விரும்ப மாட்டார்கள்.

• • •

# உலகிற்கு பல பாடங்களை கற்றுத்தந்த ஒரு வருடப்போர்

இஸ்ரேல் மீது கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 7 ஆம் நாள் ஹமாஸ் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் ஒரு வருடம் இந்த வாரம் நிறைவடைந்துள்ளது. கடந்து சென்ற ஒரு வருடத்தில் உலகம் பல மாற்றங்களை சந்தித்துள்ளதுடன், பல பாடங்களையும் கற்றுக் கொண்டுள்ளது.



ஹமாசின் அல்குசாம் பிரிகேட்டின் 3,000 படையினர் அதிகாலை 6.30 மணியளவில் அல் அக்சா புளொட் என்ற சங்கேத பெயர் கொண்ட தாக்குதலை ஆரம்பித்திருந்தனர். அவர்களுக்கு உதவியாக 1,500 படையினர் களமிறக்கப்பட்டிருந்தனர். இரண்டரை மணிநேரத் தாக்குதலில் 15 படைத்தளங்கள் மற்றும் 10 படைத்துறை நிலைகள் கைப்பற்றப்பட்டிருந்தன.

ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலின் பின்னர் காசா பகுதி மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் ஒரு வருடத்தை இந்த வாரம் பூர்த்தி செய்துள்ளது. அங்கு இதுவரையில் 42,065 மக்கள் கொல்லப்பட்டும், 97,886 பேர் காயமடைந்தும் உள்ளனர். இறந்தவர்களில் ஏறத்தாழ 17,000 பேர் சிறுவர்கள். 2.2 மில்லியன் மக்கள் அகதிகளாக உள்நாட்டிரும் வெளிநாடுகளிலும் இடம்பெயர்ந்துள்ளனர்.

அதாவது மொத்த சனத்தொகையும் இடம்பெயர்ந்தே வாழ்கின்றனர். அதேசமயம், ஹாமாசுடன் தொடர்புபடாத மேற்கு கரை பகுதி மீதும் இஸ்ரேலிய படையினரும், குடியேற்ற வாசிகளும் இணைந்து மேற்கொண்டு வரும் தாக்குதல்களிலும் இதுவரையில் 750இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹமாஸின் படை பலத்தை கணிசமான அளவு அழித்துவிட்டதாக தெரிவிக்கும் இஸ்ரேல் ஈரானில் வைத்து ஹமாஸின் அரசியல் பிரிவின் தலைவர் இஸ்மயில் ஹனி கொல்லப்பட்டது உட்பட லெபனான் மற்றும் காசா பகுதிகளில் வைத்து ஹமாஸின் பல கட்டளைத் தளபதிகளை கொலைசெய்துள்ளதாக தெரிவித்துள்ளது.



அதேசமயம், இஸ்ரேல்-பாலஸ்தீனப் போரில் லெபனானின் ஹிஸ்புல்லாக்கள் ஈராகில் உள்ள எதிப்புப்படையினர், ஏமனின் குதீஸ் அமைப்பினர் நேரிடையாகவும் ஈரான் அவர்களுக்கு ஆதரவாக நேரிடையற்ற முறையிலும் பங்கெடுத்து வருகின்ன. இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா, பிரித்தானியா உட்பட ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் மற்றும் சில அரபு நாடுகளும் நேரிடையாகவும், நேரிடையற்ற முறையிலும் பங்கெடுத்து வருகின்றன.

ஈரானின் பல இராணுவ ஜெனரல்களை சிரியா மற்றும் லெபனான் பகுதிகளில் வைத்து இஸ்ரேல் படுகொலை செய்ததும் இந்த போரில் இஸ்ரேல் மீதான ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நேரடித் தாக்குதல் ஒன்றிற்கு ஈரானை கொண்டு சென்றிருந்தது. கடந்த ஏப்பிரல் மாதமும், இந்த மாதம் 1 ஆம் நாளும் இஸ்ரேலின் இராணுவத்தளங்கள் மற்றும் விமானத்தளங்களை ஏவுகணைகள் மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் கொண்டு ஈரான் தாக்கியிருந்தது.

இஸ்ரேலின் அண்மைக்கால வரலாற்றில் வேறு ஒரு நாட்டின் ஏவுகணைத் தாக்குதலுக்கு முகம்கொடுப்பது இதுவே முதல் தடவை. ஒரு தடவை மட்டுமல்லாது இரண்டு தடவைகள் இஸ்ரேல் தாக்குதலை சந்தித்துள்ளதுடன், உடனடியாக இஸ்ரேலினால் பதில் தாக்குதலை மேற்கொள்ளவும் முடியவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

கடந்த ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற தாக்குதலை அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, எகிப்த்து மற்றும் ஜோர்டான் உட்பட பல நாடுகள் இணைந்து முறியடிக்க உதவியிருந்தன. ஆனால் அதற்கான செலவினம் ஏறத்தாழ இரண்டு பில்லியன் டொலர்கள். எனவே தான் இந்த மாதம் இடம்பெற்ற தாக்குதலில் ஈரான் கடந்த முறையை விட அதிக எண்ணிக்கையான பலிஸ்ரிக் ஏவுகணைகளை பயன்படுத்தியபோதும், மத்தியதரைக்கடலில் தரித்து நின்ற அமெரிக்காவின் இரண்டு கப்பல்களும், ஜோர்டானுமே உதவிக்கு வந்திருந்தன.

அதாவது உக்ரைன் போர், இஸ்ரேல் போர் என்ற இரண்டு போரையும் சமாளிக்க முடியாத நிலையை மேற்குலகம் எட்டியுள்ளதை கடந்த ஒருவருடப் போர் உணர்த்தியுள்ளது.



மேலும் இஸ்ரேலின் படைத்துறை இழப்புக்களைப் பொறுத்தவரையில் இந்த பேரில் 726 படையினரை இழந்துள்ளதாகவும், 4,576 பேர் காயமடைந்துள்ளதாகவும் இஸ்ரேல் தரப்பு தெரிவித்துள்ளது. அவர்களில் தரை நடவடிக்கையில் 346 கொல்லப்படதுடன், 2,300 காயமடைந்துள்ளனர். அதாவது இஸ்ரேல் இந்த நடவடிக்கையில் ஒரு பிரிகேட் படையினரை இழந்துள்ளது.

இந்த எண்ணிக்கை என்பது படையினரின் விபரங்களை வெளியிட அனுமதித்தவர்களின் எண்ணிக்கை எனவே உண்மையான இழப்பு எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருக்கலாம் என இஸ்ரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன. 1973 ஆம் ஆண்டு இடம்பெற்ற யோம் கிபூர் போரில் இஸ்ரேல் 2,600 படையினரை இழந்திருந்தது. 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற லெபனானுடனான போரில் 158 படையினரை இஸ்ரேல் இழந்திருந்தது. அதாவது கடந்த ஒரு வருடப்போரில் இஸ்ரேல் அதிக இழப்புக்களை சந்தித்துள்ளது என்பது

வேல்ஸில் இருந்து அருஸ்

தெளிவாகின்றது.

மறுவளமாக ஈரான் பல படைத்தளபதிகளை சிரியாவிலும் லெபனானிலும் இழந்துள்ளதுடன், அதன் அரச தலைவரும், வெளிவிவகார அமைச்சரும் பெல்-212 உலங்குவானூர்தி விபத்தில் கொல்லப்பட்டிருந்தனர்.

ஹிஸ்புல்லாக்களைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 400 படையினரை அது கடந்த ஒருவருடப் போரில் இழந்துள்ளதுடன், படைக் கட்டமைப்பில் பெருமளவான தளபதிகளையும், தலைவர் ஹசான் நசெரெல்லாவையும் இழந்துள்ளது. ஆனாலும் ஹிஸ்புல்லாக்களின் ஒரு இலட்சம் படை பலம் குறைந்துள்ளதா என்பதில் சந்தேகம் தான்.



தற்போது இஸ்ரேல் ஆரம்பித்துள்ள தரைத்தாக்குதலில் முதல் இரண்டு வாரங்களில் 25 இற்கு மேற்பட்ட இஸ்ரேலிய படையினர் கொல்லப்பட்டும் 100இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதும் இந்த சந்தேகத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

படைத்துறை தாக்கங்களுக்கு அப்பால் அனைத்துலக விதிகள் அனைத்தையும் இந்த போரில் இஸ்ரேல் மீறியுள்ளது. 170 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள், சில நூறு மருத்துவ பணியாளர்கள், நூற்றுக்கு மேற்பட்ட ஐ.நா பணியாளர்கள், பெருமளவான தொண்டு நிறுவனப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் உலகில் உள்ள மனிதாபிமான அமைப்புக்கள், மனித உரிமை அமைப்புக்கள், ஊடகப் பாதுகாப்பு அமைப்புக்கள் மற்றும் ஐ.நா நிறுவனங்கள் அனைத்தும் இந்த வன்முறை தொடர்பில் நடவடிக்கை எடுக்காது செயலிழந்து நிற்பதை உலகமே பார்த்து நின்றது.

இரண்டாவது உலகப்போரின் முடிவின் பின்னர் எந்த காரணம் கூறி இந்த அமைப்புக்களை யார் உருவாக்கினார்களோ தற்போது அவர்களுக்கு வேண்டியவர்கள் அதனை மீறும் போது இந்த அமைப்புக்கள் செயற்றிறன் அற்று நிற்பது என்பது இந்த அமைப்புக்கள் மீதான நம்பிக்கைகளை உலக நாடுகளிடம் சிதறடித்துள்ளது. ஐ.நாவின் அனைத்துலக நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தீர்மானங்கள், பாதுகாப்புச் சபையின் தீர்மானங்கள், அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணைகள் அனைத்தும் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்களுக்கு இணையான நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்களும், பலம்பெற்றுவரும் பல்துருவ உலக ஒழுங்கு மேலும் பலம்பெறவேண்டும் என்ற வாதங்களையும் இந்த உதாசீனம் வலுப்படுத்தியுள்ளது.

பொருளாதார ரீதியாக பார்த்தால் குதீஸ் அமைப்பினரின் தாக்குதல் என்பது செங்கடல்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## வெளியார்... தொடர்ச்சி ...

அவசியம் குறித்தும் முன்வைப்புக்கள் இருந்து வருகின்றன. தொழிற்சங்கள் பாரம்பரிய ஊதிய முறையில் இருந்தும் விடுபட்டு வெளியார் உற்பத்தி முறைக்கு வலுசேர்க்க வேண்டும் என்பதும் பலரின் கருத்தாகவுள்ளது.

இந்நிலையில் பெருந்தோட்டங்கள் படிப் படியாக செல்வாக்கிழந்து வரும் நிலை குறித்து பலர் தமது விசனத்தையும் முன்வைத்து வருகின்றனர். கம்பனிகளும் நிர்வாகங்களும் பெருந்தோட்டங்களை முறையாக பராமரிக்காது இலாபத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு செயற்படுவதனால் தேயிலைத் தோட்டங்களின் பெரும்பகுதி காடாகியுள்ளது. இதனால் தொழிலாளர்கள் உயிர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளதாக செங்கொடி சங்கத்தின் தலைவர் செல்லையா சிவசுந்தரம் அண்மையில் தெரிவித்திருந்தார். மேலும் ஆரம்ப காலங்களில் ஆண் தொழிலாளர்கள் தோட்ட பராமரிப்பு வேலைகளிலும் பெண் தொழிலாளர்கள் கொழுந்து பறிக்கும் வேலைகளிலும் ஈடுபட்டனர். ஆனால் தற்போது பல தோட்டங்கள் பராமரிக்கப்படாததால் அவை காடாகி வருகின்றன. இதனால் பெருந்தோட்டப் பகுதிகளில் காட்டுப் பன்றிகள், சிறுத்தைகள், உள்ளிட்ட மிருகங்கள், விஷ ஜந்துக்கள் ,விஷ அட்டைகள், குளவிகள் என்பன அதிகரித்துள்ளன. நாளாந்தம் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கும் ஆளாகி வருகின்றனர். பலர் உயிர்ப்பலியாகியுமுள்ளனர். பாதிப்பிற்கு உள்ளாகும் தொழிலாளர்களுக்கு தோட்ட நிர்வாகம் எவ்விதமான கொடுப்பனவுகளையோ நட்ட ஈடுகளையோ வழங்குவதில்லை என்றும் செல்லையா சிவசுந்தரம் சுட்டிக்காட்டி இருந்தார்.

### முதலாளிமார் சம்மேளனம்

இவ்வாறாக பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையும், தொழிலாளர்களும் நெருக்கீடுகள் பலவற்றுக்கும் முகம் கொடுத்து வருகின்ற நிலையில் இத்தொழிற்றுறையினதும், தொழிலாளர்களினதும் எதிர்காலம் கேள்விக்குறியாகி வருகின்றது. எனவே பெருந்தோட்டங்களின் இருப்பையும் தொழிலாளர்களின் அடையாளத்தையும் பாதுகாக்க வேண்டிய ஒரு தேவை மேலெழுந்துள்ளது. இது தொடர்பில் முதலாளிமார் சம்மேளனமும் தனது ஆழமான பார்வையினை செலுத்தியுள்ளது. நிலையான அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் பயிர் பல்வகைப்படுத்தலை ஊக்குவிப்பதற்கும் முக்கியமான கொள்கை வகுப்பில் பங்கு தாரர்களின் ஈடுபாட்டுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கான உருமாறும் சகாப்தத்தை ஆரம்பிக்குமாறு முதலாளிமார் சம்மேளனம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் இந்த விடயத்தில் அனைத்து பங்குதாரர்களையும் ஈடுபடுத்துவதன் மூலம் தோட்டத்துறையின் நீண்ட கால நம்பகத்தன்மை மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் ஒரு விரிவான கொள்கைக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க முடியும். புதிய தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்கள் தற்போது இந்தத் துறையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இந்தத் தொழிற்றுறையின் இருப்புக்கான சாத்தியத்தையும் ஏற்படுத்தும். நாங்கள் நீண்ட கால நிலைத்ததன்மை மற்றும் செழிப்புக்கான முன்னோக்கிய கொள்கைகளை செயற்படுத்துவதில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கதயாராகவுள்ளோம். தோட்டத்துறையை முன்னெடுத்துச் செல்வதில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றபோதும் அதனை நாம் எதிர்கொண்டு வருகின்றோம். எனினும் கடந்தகால அரசாங்கத்தின் கொள்கைத் தடைகள் இந்தத் துறைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து, வளர்ச்சிக்கான சாத்தியத்தை குறைத்துள்ளன. எனவே இது தொடர்பில் ஜனாதிபதி தலைமையிலான புதிய அரசாங் கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் முதலாளிமார் சம்மேளனம் கேட்டுக் கொண்டுள் ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

• • •

## இலங்கையின்... தொடர்ச்சி ...

எதிர்ப்பதற்கும் தீர்மானித்தமை ஏமாற்றமளிக்கின்றது.

பாரதூரமான மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புகூறுவதற்கு கிடைத்துள்ள வளங்களை பயன்படுத்து அரசாங்கம் தயாராகவுள்ளதா என்ற சந்தேகத்தை இது எழுப்பியுள்ளது. ஆழமா வேரூன்றியுள்ள தண்டனையின்மை தொடரும் ஆபத்தும் உள்ளது. இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் சர்வதேச சமூகம் நீதி உண்மை இழப்பீட்டு விவகாரங்களில் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை அடைவதற்காக சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் ஈடுபாட்டை பேணவேண்டும்.

அதேவேளை இலங்கை ஐக்கியநாடுகளின் பொறுப்புக்கூறும் திட்டம் உட்பட ஐநாவின் மனித உரிமை பொறிமுறைகளுடன் முழுமையான ஒத்துழைப்பை பேணவேண்டும்இ இலங்கையின் மூன்று தசாப்த யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள்இசர்வதேச சட்டத்தின் கீழான ஏனைய சட்ட மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் உயிர் பிழைத்தவர்கள் பல வருடங்களாக நீதிக்காக பொறுப்புக்கூறலிற்காக காத்திருக்கின்ற நிலையில் இலங்கை அரசாங்கம் இது குறித்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும் எனக் கூறியுள்ளார்.

## யார் ஆட்சிக்கு ... தொடர்ச்சி ...

*05.09.2024*ம் ஆண்டு விவசாய நடவக்கையில் ஏற்பட்ட விவசா யிகளை தடுத்து நிறுத்தி மீண்டும் பிக்கு தனது அடா வடியை தொடர்ந்தார்.

உடனடியாக இப்பிணக்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரிடம் தெரியப்படுத்தப்பட்டு கடந்த *07.09.2024* ம் திகதி மாலை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பிக்கு உற்பட காணி உரிமையாளர்கள் அனைவரையும் அழைத்து முழுமையான விசாரணைக்குப் பிறகு உரிய ஆவணங்கள் உள்ள விவசாயிகள் உடனடியாக வயற்செய்கையில் ஈடுபடுமாறு அனுமதி வழங்கினார்.

இதைத் தொடர்ந்து *2024.09.10* ந் திகதி குச்சவெளி கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் *2024*ம் ஆண்டுக்கான பெரும்போக வயற் செய்கைக்காக மக்கள் தங்கள் காணிகள் அளவீடு செய்யச் சென்ற வேளை குறித்த காணிகளில் அளவீடு செய்ய விடாது தடுத்த நிலையில் புல்மோட்டை காவல்துறை உயர் அதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்து மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு அனைத்து விவசாயிகளையும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு பணித்தனர். இந்நிலையில் காணி அளவீடு தடுத்து நிறுத்தப்பட்டது.

இவ்வாறாக கடந்த தினத்தில் புல்மோட்டையினைச் சேர்ந்த ஜெயினுலாப்தீன் புகாரி என்பவரின் உறுதிக் காணிக்குள் அடாவடியாக வயற் செய்கை மேற்கொள்ள முயன்ற குறித்த பிக்குவின் செற்பாட்டால் மேற்கொள்ளப்பட்ட அவசர நடவடிக்கைகளினால் *2024.09.07* அனைத்தும் விவசாயிகளும் திருகோணமலை மாவட்டச் செயலகத்துக்கு அழைக்கப்பட்ட போது, விவசாயிகளினால் தகுந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் உடனடியாக விவசாயிகளின் காணிகளை மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படைக்குமாறு மாவட்டச் செயலாளர் உத்தரவு பிறப்பித்தார்.

இவ்வாறாக 'புனித பூமி' என அடையாளப்படுத்தி அரச பாதுகாப்பு வழங்கப்பட்ட மெய்பாதுகாவலர்களுடன் அத்துமீறி அப்பாவி மக்களை அச்சுறுத்தி நெற் செய்கை காணிகளை விவசாயம் செய்யவிடாது அடாத்தாக தடுத்து நிறுத்துகின்றனர்.

கடந்த நல்வாட்சி அரசாங்கம் தொடக்கம் அதிகளவான காணி அபகரிப்பு இடம் பெற்ற மாவட்டமாக திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு காணப்பகுவதாகவும் இப் பகுதியில் *3887* ஏக்கர் தனியார் நிலங் கள் அபகரிக்கப்பட்டு *26* விகாரைகள் கட்டுமாணப் பணிக்காக ஒதுக்கப்பட்டதாகவும் அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் காணி ஆராய்ச்சியில் ஈடுபடும் ஒக்லேன்ட்*(The Oakland Insitute)* நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

குறித்த அரிசிமலை திரியாய் பகுதிக்கு *2010*ம் ஆண்டு ஹம்பாந்தோட்டையில் இருந்து வருகை தந்த பிக்குவினால் புனித பூமி என கூறி பல நில அபகரிப்புக்கள் இடம் பெற்றுள்ளதுடன் பெரும்பான்மை இன குடியேற்றத் திட்டத்தையும் மேற்கொண்டுள்ளார்.

மக்கள் விவசாய காணிக்குள் நெற் செய்கை செய்ய விடாது தடுத்து நிறுத்திய சப்தநாக விகாரையின் விகாராதிபதி அத்து மீறி மீண்டும் அவர் உழுதுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. இது தொடர்பில் குச்சவெளி காவல்துறையில் முறைப்பாடளித்த ஜெ.புஹாரி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

சட்ட ரீதியான ஆவணங்கள் இருந்த போதும் தங்களது காணிகளில் விவசாய செய்கையில் ஈடுபடாது வாழ்வாதாரத்தை நாசப்படுத்தும் பௌத்த பிக்குகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை குறித்து தாங்கள் கவலையடைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். தமிழ் மக்களின் காணிகள் இவ்வாறே வடக்கு கிழக்கில் அபகரிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது .

தற்போதைய அரசாங்கம் பல அதிரடியான நல்ல பல விடயங்களை நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் செய்வதாக கூறுகின்ற போதிலும் இப்படியான அப்பாவி மக்களின் உரிமைகள் விடயத்தில் அதிக அக்கரை கொண்டு உரியவர்களின் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு விவசாய செய்கையில் ஈடுபட ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும் பௌத்த துறவிகளுக்கு ஒரு சட்டம் சாதாரண பொது மகனுக்கு ஒரு சட்டமா எனவும் குறித்த விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

விவசாயத்தை நம்பி வாழும் இம் மக்களின் வாழ்வாதாரமே நெற் செய்கையாகும். இருந்த போதிலும் நில அபகரிப்புக்களை மேற் கொள்வதால் ஜீவனோபாயம் பாதிக்கப்படுகிறது .

எனவே தான் தற்போதைய அரசாங்கம் இம் மக்களுக்கு சரியான நிரந்தர தீர்வை வழங்க முன்வர வேண்டும் என்பதே பெரும் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

• • •

## தமிழ்த்தேசிய ... தொடர்ச்சி ...

கட்சியாக இரண்டு தமிழ் தேசிய பரப்பும் பிரிந்து நின்றாலும் முரண்பாடுகளை ஏற்படுத்தாமல் இரு பிரிவுகளும் செயற்படும்போது தமிழ் மக்கள் தமிழ் தேசிய அரசியலில் நம்பிக்கைகொண்டு மீண்டுவரும் சந்தர்ப்பம் ஏற்படும்.அதனை முன்னெடுக்கவேண்டிய மிக கட்டாயமான நிலைமை இன்று ஏற்பட்டுள்ளது.இதனை உணர்ந்து செயற்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகவுள்ளது.

## பாராளுமன்ற ... தொடர்ச்சி ...

இப்பத்தியில், 'ஜே.வி.பி.யின் இனவாத செயற்பாடுகளுக்கு அனுரகுமார திசாநாயக்கா பொறுப்புக்கூறுவாரா?' மற்றும் :தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளாத ஜே.வி.பி தமிழ் மக்களின் ஆட்சியுரிமையை கோருகிறது!'' எனும் தலைப்புகளில் நீண்ட விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. அது கடந்த காலமாக விமர்சிப்போருக்கு, ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு பின்னர் ஜே.வி.பி காபந்து அரசாங்கத்தின் ஈழத்தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை குறிப்பிடுவது பொருத்தமானதாக அமையும். 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை யுத்தத்தில், குறைந்தபட்சம் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட போர் குற்றங்களுக்கு பொறுப்பு கூறல் தொடர்பாக ஐநா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை ஜே.வி.பி அரசாங்கம் முழுமையாக நிராகரித்துள்ளது. அதேவேளை இனப்படுகொலை குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள முன்னாள் ராணுவ அதிகாரிகளுக்கு ஜே.வி.பி அரசாங்கமும் உயர் பதவிகளை வழங்கி வருகின்றது. திருகோணமலை வதைமுகாமில் மாணவர்கள் கொல்லப்பட்ட வழக்கில் கடற்படை அதிகாரிகளுக்கு உதவிய முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க துறைமுக அதிகார சபையின் தலைவராக ஜேவிபி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான பின்னணியில், தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுவதுடன், அதேவேளை குறைந்தபட்ச தீர்வுகளையும் ஏற்றுக் கொள்ளாத ஜே.வி.பி அரசாங்கத்தை நிராகரிப்பது ஈழத் தமிழர்களின் தார்மீக பொறுப்பாகும்.

இரண்டாவது, தமிழ் தேசிய முலாம் பூசப்பட்ட அரசியலுக்குள்ளும் சிலரை அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டிய பொறுப்பு தமிழரிடம் காணப்படுகின்றது. தமிழ் அரசியல் கட்சிகளிடையே தேசியம் என்பது அரசியல் மூலமாகவே காணப்படுகின்றது. அதிலும், ஒரு சில அரசியல்வாதிகள் தென்இலங்கையுடன் உறவுகளை பேணிக் கொண்டு தமிழ் மக்களை தோற் கடிக்கும் நிகழ்ச்சி நிரலை செயற்படுத்தி வருகின்றனர். தேர்தல் காலங்களில் மாத்திரம் போலியான தமிழ்த்தேசிய விம்பத்தையும் பாரம்பரிய அரசியல் விம்பத்தையும் வைத்துக்கொண்டு தமது அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த முயல்கின்றார்கள். அதேவேளை தேர்தலுக்குப் முன்னரும் பின்னரு மான செயற்பாடுகளில் தமிழ் மக்களின் தேசிய திரட்சியை சீர்குலைப்பதில் முதன்மையான சக்தி யாகவும் காணப்படுகின்றார்கள். 2001ஆம் ஆண்டு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உருவாக்கம், தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைப்பதன் ஊடாக, அரசியல் ரீதியான திரட்சியை ஏற்படுத்தும் நோக்கிலேயே இடம்பெற்றது. எனினும் 2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட்ட மௌனிப்புக்கு பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மறைந்த தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் தேசிய நீக்கத்திற்காக திரட்சியை சீர்குலைத்தார். அவரால் 2009க்கு பின்னர் ஈழத் தமிழ் அரசியலுக்கு அழைத்து வரப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், தமது குருவின் வழியே தமிழ் தேசிய திரட்சியை சீர்குலைப்பதை முனைப்புடன் செயல்படுத்தி இருந்தார்கள். அந்தப் பின்னணியிலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பு மெல்ல மெல்ல உடைக்கப்பட்டது. அதன் உச்சமாக 2022ஆம் ஆண்டு நடைபெறாத உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு தமிழரசு கட்சியை தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியே தனியாக கொண்டு செல்வதாக தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஆ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக சிதைக்கப்பட்டது. தற்போது பொதுத் தேர்தலை முன்னிட்டு வேட்பாளர் தெரிவில் தமிழரசுக்கட்சிக்குள் ம.ஆ.சுமந்திரனின் தன்னிச்சையான செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக கூறி, தமிழரசு கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் வெளியேறியுள்ளார்கள். இது தமிழரசுக் கட்சியையும் பிளவுபடுத்தியுள்ளது. இவ்வாறான பின்னணியில் தமிழ் தேசியத்தின் திரட்சியை சிதைக்கும் நோக்கில் தமிழ்த் தேசிய முலாம் பூசி, தமிழ் தேசிய பாரம்பரிய அரசியல் கட்சி என்ற விம்பத்துக்குள் சில அரசியல்வாதிகள் காணப்படுகின்றார்கள். இவ்வாறான போலிகளை தமிழ் மக்கள் அடையாளம் கண்டு, நிராகரிக்க வேண்டியது தமிழ் தேசிய அரசியலின் எதிர் காலத்திற்கு அவசியமானதாகும்.

மூன்றாவது, தமிழ் அரசியல் கட்சிகளில் சிறந்தவர்கள் என்ற தெரிவினை இனங்காட்டுவதும் கடினமானதாகும். தமிழ் அரசியல் பரப்பில் காணப்படும் அரசியல் கட்சிகள் குறைந்தபட்சம் தமிழ் மக்களின் தேசியத்தின் அடிப்படையில் ஒருங்கிணைந்து செயற்பட கூட முன்வராதவர்களாகவே காணப்படுகின்றார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் தேசிய எழுச்சியை அது சார்ந்த திரட்சியை உருவாக்குவதற்கே தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டு இருந்தார். எனினும் தமிழ்ப் பொது வேட்பாளர் சார்ந்து, தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒரு இணக்கமான நிலைப்பாடு காணப்படவில்லை. தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் தேர்தல் புறக்கணிப்பு சார்ந்து செயற்பட்டிருந்தார்கள். தமிழரசு கட்சி தமிழ் பொது வேட்பாளரை நிராகரித்து, ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வை பரிந்துரைத்த தென்இலங்கை கட்சியினை ஆதரித்திருந்தது. அதேவேளை தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்புக்குள் பங்காளர்களாக செயற்பட்டவர்களிலும் புளொட் மற்றும் ரெலோ கட்சியினர் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஆதரவாக மனப்பூர்வமாக செயல்பட்டு இருக்கவில்லை . அதுமட்டுமன்றி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாக தமிழ் மக்களின் தேசிய எழுச்சிக்கான பொதுச்சின்னத்தை ஒரு கட்சிக்குள் முடக்கியுள்ளனர். இது தமிழ் மக்களின் தேசிய எழுச்சியை மலினப்படுத்தியுள்ளது. மேலும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் க.வி. விக்னேஸ்வரன் மதுபானசாலை அனுமதிக்கான சிபார்சு வழங்கியமை சர்ச்சைக்குரியதாக அமைகின்றது. இந்த பின்னணியில் தமிழ் அரசியல் கட்சிகளின் தமிழ்த் தேசிய கருத்தாடல் என்பது வெறும் அரசியல் முலாமாகவே அமைகின்றது. இவர்களில் ஒரு அணியை கைநீட்டக்கூடிய நிலைமைகள் இல்லை. கடந்த காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதி தேர்தல்களில் பயன்படுத்திய 'தீயதில் குறைந்த தீயதை' தெரிவு செய்யும் அணுகுமுறையையே, இம்முறை தமிழ் மக்கள் பொதுத் தேர்தலில் கையாள வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. ஒவ்வொரு அணிகளிலும் இளையோர், முன்னாள் போராளிகளை பிரதான வேட்பாளர்கள் கறிவேப்பிலைக்காக உட்புகுத்தியுள்ளார்கள். இக்கறிவேப்பிலைகளுக்கு தமிழ் மக்கள் அதிகம் முக்கியத்துவம் அளிப்பதால், பழையவர்களையும் தவிர்க்க வேண்டியவர்களையும் நிராகரிப்பதே உசிதமான முடிவாகும்.

எனவே, 2024ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் தமிழ் மக்களுக்கு கடினமான பாதையையே வெளிப்படுத்தி உள்ளது. இங்கு தமிழ் மக்கள் எதனை தெரிவு செய்கின்றார்கள் என்பதற்கு அப்பால், எதனை நிராகரிக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது. தமிழ் தேசிய அரசியலின் இருப்பிற்கு ஆபத்தான சக்திகளை, தமிழ்த்தேசியத்தை அழிப்பதை நிகழ்ச்சி நிரலாக கொண்டு செயற்படுவோரை நிராகரிப்பதன் மூலம் தமிழ் தேசிய அரசியலுக்கு வரக்கூடிய ஆபத்துக்களை குறைக்கக்கூடிய சூழல் காணப்படுகிறது. அதேவேளை குறைவான ஆபத்து சூழலில் எதிர்காலத்தையும் சரியாக கட்டமைக்கக்கூடிய இடைவெளியை பெறக்கூடியதாக அமையும். தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டிய தரப்புகளை சரியாக அடையாளம் காண்பதும் காண்பிப்பதும் தமிழ்த் தேசிய ஆர்வலர்களின் பொறுப்பாகவும் கடமையாகவும் அமைகின்றது.

• • •

## செயற்கைச் ... தொடர்ச்சி ...

அமுக்கம் தேவை.

அதனை எட்டுவதற்கு பல நடுகளின் தொழில்நுட்பங்கள் இணைக்கப்படுகின்றன. ரஸ்யாவின் ரொசோடம் எரிசக்தி நிறு வனமும் இந்த திட்டத்திற்கு தேவையான 25 இற்கு மேற்பட்ட சாதனங்களின் தொழி நுட்பத்தை வழங்கியுள்ளது. உக்ரைன் சமர் காரணமாக ரஸ்யா மீது விதிக்கப்பட்ட தடைகளினால் தாமதம் ஏற்பட்டபோதும் தற்போது அதனை மீண்டும் விரைவாக நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் இந்த திட்டத்தின் தலைவர் பிரோபராபாசி ரஸ்யாவுக்கு சென்றுள்ளதாக ரஸ்யாவின் ஊடகங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை(8) தெரிவித்துள்ளன.

## காலநிலை ... தொடர்ச்சி ...

வசதிகளை இழந்துள்ளதுடன், பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சுமந்திரனால் ... தொடர்ச்சி ...

தமக்கும் சேர்த்து வாக்குச் சேகரிப்பார்கள் என்பது சுமந்திரனின் கணக்கு. அதன்மூலம் தனது வெற்றியை உறுதிப்படுத்த அவர் முயல் கிறார். தப்பித்தவறி தோல்வியடைந்தால், தேசியப் பட்டியல் மூலமாக வருவது அவரது திட்டம்!

அதனால்தான், பொது அமைப்புக்கள், சமூகப் பெரியவர்களின் வேண்டுகோளையும் புறக்கணித்து அம்பாறையில் தமிழரசுக் கட்சி போட்டியிட வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருக்கின்றார். ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திருமலையில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட இணங்கியது. மறுபுறம் அம்பாறையை தமக்குத் தருமாறு கேட்டது. இப்போது அம்பாறையிலும் இரு அணிகளும் களத்தில் இறங்குவதால், தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்படும் ஆபத்து உருவாகியிருக்கின்றது.

தேசியப்பட்டியலுக்குத் தேவையான வாக்குகளைச் சேகரிக்க அம்பாறையை மீண்டும் பறிகொடுக்க தமிழரசுக் கட்சி தயாராகியிருக்கின்றது. இணக்கத்தை ஏற்படுத்த தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட பேச்சுக்கள் தோல்வியடைந்திருக்கின்றது.

இந்த நிகழ்வுகள் அனைத்திலும் பார்வையாளராக இருந்துவரும், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தொடர்ந்தும் தாம் தலைவராக இருப்பதில் அர்த்தமில்லை என்ற நிலையில்தான் பதவியைத் துறக்கும் முடிவை அறிவித்திருக்கின்றார். சிறிதரனைத் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு அவர் அழைத்திருக்கின்றார். ஆனால், தமிழரசுக் கட்சியின் தெரிவுகள் அனைத்துக்கும் நீதிமன்றத்தினால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இவ்விடயத்தில் தமது அடுத்த நகர்வு பொதுத் தேர்தலின் பின்னர் இடம்பெறும் என்று சிறிதரன் தெரிவித்திருக்கின்றார்.

நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறப்போகும் பொதுத் தேர்தலைப் பொறுத்தவரையில், யாழ்ப்பாணத் தேர்தல் களம் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்குக் காரணம் தமிழரசின் அதிகாரத்துக்கா கப் போராடும் இருவர் இங்கு களமிறங்கியிருப்பது தான். யாழ்ப்பாணத் தேர்தல் களத்தை சூடாக்கியிருப்பது இந்த இருவருக்கும் இடையிலான விருப்பு வாக்குப் போட்டிதான்! தேர்தல் முடிவின் பின்னர் வீட்டில் உள்ள மற்றவர்களும் வெளியே வரும் நிலை உருவாகுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்!

• • •

### உலகிற்கு ... தொடர்ச்சி ...

பகுதி ஊடான கப்பல் போக்குவரத்தை கடுமையான பாதித்துள்ளது. இஸ்ரேலின் துறை முகம் ஒன்றை முற்றாக முடக்கியதுடன், ஏற்கனவே ரஸ்யா மீதான தன்னிச்சையான தடையினால் ஆட்டம்கண்டுவரும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரத்தை மேலும் சரிவடையவைத்துள்ளது.

அமெரிக்காவின் பொருளாதாரம் மிகப் பெரும் சரிவை சந்தித்து நிற்கின்றது. இஸ்ரேலின் பொருளாதாரத்திலும் இந்த போர் விரைவில் மீளமுடியாத தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இஸ்ரேலின் நிதித் தரமும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த அதிர்வுகள் உலகத்தின் பொருளாதாரத்திலும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன.

அதாவது படைத்துறை, இராஜதந்திர, மனிதாபிமான மற்றும் பொருளாதார துறைகளில் கடந்த ஒரு வருடப் போர் இஸ்ரேலுக்கும், மேற்குலக நாடுகளுக்கும் கடுமையான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மை. மறுவளமாக பாலஸ்தீன மக்களும், லெபனான் 



மற்றும் சிரியா மக்களும் கடுமையான இழப்புக்களை சந்தித்துவருகின்றபோதும், அனைத்துலக ரீதியில் இரு தேசங்கள் என்ற கோசம் வலுப்பெற்றுவருவதுடன், அந்த நோக்கத்தை வலுப்படுத்தும் அணியில் உலகின் பல நாடுகளுடன் பல அரபு நாடுகளும் ஒருங்கிணைந்து வருவதும் பாலஸ்தீனத்திற்கு பலம் சேர்ப்பதாகவே அமையும்.

• • •

### வடக்கு கிழக்கு ... தொடர்ச்சி ...

மீண்டும் அவர்களை நம்பி இந்த தேர்தலிலும் வாக்களிப்பார்கள்.

ஏனெனில் ஜனாதிபதித் தேர்தலில் முதன்மையான ஏனைய இரு வேட்பாளர்களும் முற்றாக மக்களால் தோற்கடிக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேபோல் கடந்த காலங்களில் மக்களின் நலன்களில் எந்த அக்கரையும் இல்லாமல் அதிகாரத்தைப் பயன் படுத்தி நலன்களை அனுபவித்துக்கொண்டு வந்த மூத்த அரசியல் வாதிகள் யாரும் இந்த பொதுத் தேர்தலில் பங்கு பெறவில்லை என்பது ஒரு நல்ல செய்தி. அவர்கள் மீதுள்ள மக்களின் எதிர்ப்பைக் கண்டு அவர்கள் விலகிக்கொண்டார்கள் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

நாடு முழுவது மேற்குறிப்பிட்ட காரணங்கள் இருக்க, வடக்கு கிழக்கில் உள்ள மக்களின் எதிர்பார்ப்பு இங்கு முக்கியமாக நோக்க வேண்டியுள்ளது. அதில் முக்கியமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, அவர்களுக்கு என்ன நடந்தது? கையளிக்கப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துதல் போன்ற பல பிரச்சனைக்கான தீர்வுகளை அந்த மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே அந்த மக்களின் கோரிக்கைகளை புதிய அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் ஏனெனில், கடந்த பல வருடங்களாக வடக்கு கிழக்கு மக்கள் போராடுவது மேற்குறிப்பிட்ட பிரச்சினைக்கு உண்மையைக்கண்டறிந்து அதற்கு பொறுப்புக் கூறுதல். அதைத்தான் அந்த மக்கள் விரும்புகின்றனர். அத்தோடு நம்பகரனமான பொறிமுறையின் மூலம் இவற்றை செய்ய வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். எனவே இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு இந்த புதிய அரசாங்கம் இந்த பொதுத்தேர்தலை சந்திப்பது அவர்களுக்கு நல்லது.

அதே சமயத்தில் இப்போதுள்ள நிலையை பார்த்தால் தமிழ் தேசிய வாதிகளின் பிடி கொஞ்சம் நீர்த்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். தமிழரசு கட்சி உடைந்து விட்டது.

அதைத்தொடர்ந்து வேறுபல உதிரிக் கட்சிகள், தேர்தலில் நிக்கின்றன. ஆகவே இம்முறை வடக்கு கிழக்கு மக்களுக்கு ஒரு நெருக்கடியான நிலைதான் ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாதுகாத்து வரப்பட்ட தேசியம் என்பது இந்த முறை மிகப் பெரியதொரு பின்னடைவை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. இந்த நிலை பொதுத்தேர்தலிலும் பிரதிபலிக்கும் என்பது என் கருத்து

• • •

### 2024 பொதுத் ... தொடர்ச்சி ...

டன், அங்குதலா 15 அணிகள் போட்டியிடுகின்றன. நுவரெலியா மாவட்டத்தில் 17 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 11 சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளன.

பாராளுமன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான சமல்ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ ஆகியோர் போட்டியிடவோ தேசியப் பட்டியலில் இடம்பெறவோ மாட் டார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித் துள்ளது.

அதே நேரம் திருகோணமலை மாவட்டத்தில் 20 அரசி யல் கட்சிகள், 17 சுயேட்சை குழுக்கள் வேட்பு மனு தாக்கல் செய்தி ருந்தன. அவற்றில் 17 அரசியல் கட்சிகளும் 14 சுயேட்சை குழுக்களும் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன.

நாடாளுமன்ற தேர்தலில் இம் முறை யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 44 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் களமிறங்கவுள்ளன.

இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, சிறிலங்கா பொதுஜன பெரமுன, கே.வி.தவராசா தலைமையிலான அணி மற்றும் அங்கஜன் இராமநாதன் முதலிய 46 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் வேட்புமனுத் தாக்கல் செய்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா நாடாளுமன்ற தேர்தலில் வன்னி தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக 23 அரசியல் கட்சிகள் மற்றும் 23 சுயேச்சை குழுக்கள் உள்ளடங்களாக 47 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கிய 306081 வாக் காளர்களை கொண்ட வன்னி தேர்தல் தொகுதியில் சுயேற்சை குழுக்கள் மற்றும் அரசியல் கட்சிகளை உள்ளடக்கி 51 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 47 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 6 உறுப்பினர்களை தெரிவு செய்ய 396 பேர் போட்டியிடுகின்றனர். இவற்றில் சில வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் 2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் வெள்ளிக்கிழமை (11) நண்பகல்12.00 மணியுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

### லெபனான் ... தொடர்ச்சி ...

கடந்த சில நாட்களாக ஹிஸ்புல்லாக்களும், இஸ்ரேல் படையினரும் நீலக் கோட்டைத் தாண்டி மோதல்களில் ஈடு பட்டு வருகின்றனர். இது ஐ.நாவின் 1701, 1559 தீர்மானங்களை மீறும் செயலாகும். லெபனான் மற்றும் பெய்ரூட் நகர் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களில் கடந்த வருடம் 2,000 இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். ஆனால் கடந்த இரு வாரங்களில் அங்கு 1,500 கொல்லப்பட்டுள்ளனர்.

லெபனானில் ஒரு மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் 300,000 மக்கள் சிரியாவுக்கு சென்றுள்ளனர். வடக்கு இஸ்ரேல் பகுதியில் 60,000 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். நாம் மிகப்பெரும் போர் ஒன்றை எதிர்கொண்டுள்ளோம். எல்லா நாடுகளின் இறைமையும் மதிக்கப்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.